# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




திங்கட்கிழமை 13.12.2021 supeedsam.com supeedsam@gmail.com

# இரவோடிரவாக சங்குமண்கண்டியில் அமர்ந்த புத்தர் சிலை
# பிக்குமார் அட்டகாசம்: பொலிசார் குவிப்பு

## 100 வீத தமிழர்கள் வாழும் இடத்தில் புத்தர் சிலை எதற்கு? மக்கள் போராட்டத்தையடுத்து சிலை அகற்றப்பட்டது







(வி.ரி.சகாதேவராஜா , எஸ்.கார்த்திகேசு)

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்திலுள்ள சங்குமண்கண்டி தனித்தமிழ் கிராமத்தில், நேற்றுமுன்தினமிரவு நள்ளிரவில் திடிரென வைக்கப்பட்ட புத்தர் சிலையால் அப்பிரதேசத்தில் பதற்றம் நிலவியது.

பொதுமக்கள் அவ்விடத்திலேயமர்ந்து அதிகாலை 5முதல் அன்னம்தண்ணியன்றி சத்தியாக்கிரகத்திலீடுபட்டனர்.

பொத்துவில் பிரதேச சங்கமன்கண்டி தாண்டியடி பிரதேசத்தில் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவில்

02 ஆம் பக்கத்தில்...

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு கோரி இந்தியாவிற்கு கடிதம் அனுப்ப தீர்மானம்

## தமிழ், முஸ்லிம் கட்சிகள் முடிவு

(ராஜ்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஸ்டி அல்லது கூட்டு சமஸ்டியே தீர்வாக முடியும். அதனை என்றோ ஒருநாள் அடைந்தே தீருவோம். இந்தநிலையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணும் வரை அதிகாரப் பரவலாக்கங்களை உள்ளடக்கிய 13 வது திருத்தம் பாதுகாக்கப்படவேண்டும் என்று தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் கூட்டாக தெரிவித்துள்ளன.

அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இந்தியாவிற்கு

02 ஆம் பக்கத்தில்...



# மொழி தெரிந்திருந்தால் யுத்தம் ஏற்பட்டிருக்காது

(ஊர்காவலன்)



தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியும், சிங்கள மக்களுக்கு தமிழ் மொழியும் தெரிந்திருந்தால் 30 வருடகாலமாக யுத்தம் இடம்பெற்றிருக்காது என நினைக்கிறேன் என்று இந்து பௌத்த கலாச்சாரப் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்தனதேரர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# சமஸ்டியே தீர்வு, அதனை அடைந்தே தீருவோம்

## விக்கி சூளுரை

(ராஜ்)

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு சமஸ்டி அல்லது கூட்டு சமஸ்டியே தீர்வாக முடியும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து மேற்கொண்ட சந்திப்பை அடுத்து

02 ஆம் பக்கத்தில்...

# சாணக்கியன் போன்ற இளைஞர்களை களமிறக்கியிருந்தால் நாட்டையே தலைகீழாக மாற்றி இருப்போம்

(ஜூட்)

13 ஆம் திருத்தத்தில் உள்ள முக்கிய விடயங்களையும் உள்வாங்கி, அதையும் தாண்டிய அதிகாரப்பகிர்வையே எதிர்பார்க்கின்றோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்தோடு, சம்பந்தன் அன்றைய சிந்தனையோடு இருக்காது, புதியதையும் உள்வாங்குவதாலேயே இன்றும்

02 ஆம் பக்கத்தில்...



# இதுவா ஆசியாவின் ஆச்சரியம்?



ஆசியாவின் ஆச்சரியம் இதுவா? என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கனேமுல்ல பெல்லக தேவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் இன்று உரையாற்றிய போது

02 ஆம் பக்கத்தில்...

# நாட்டில் மிகப் பெரிய பஞ்சம் ஏற்படும்

(காந்தன்)



இன்னும் இரண்டு வாரங்களில் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு முடிந்து பூச்சியமாகி, நாட்டில் மிகப் பெரிய பஞ்சம் ஏற்படும் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பன்னிப்பிட்டிய வீர மாவத்தையில் ஐக்கிய பொதுச் சேவை

02 ஆம் பக்கத்தில்...

# அரிசி உட்பட 50 வகையான பொருட்களின் விலை குறைப்பு

(காந்தன்)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நேற்று (12) தொடக்கம் பல வகையான அரிசிகள் 100 ரூபாவுக்கும் குறைவான விலையில் சதொச வில் பெற்றுக் கொள்ள முடியும்.

வருட இறுதி வரையில் இந்தச் சலுகை நடைமுறையிலிருக்கும் என்று

02 ஆம் பக்கத்தில்...




# புன்னக்குடா விகாராதிபதியை இடமாற்றக்கோரி சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்



(செங்கலடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடாவில் உள்ள விகாராதிபதியை இடமாற்றக்கோரி பகுதியில் வசிக்கும் சிங்கள மக்கள்

02 ஆம் பக்கத்தில்...







# மூதூரில் குண்டு வெடிப்பு

## 15 வயது சிறுவன் பலி



மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தோப்பூர் அல்லே நகர் பிரதேசத்தில் குண்டொன்று வெடித்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த 15 வயதான சிறுவன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணமடைந்தார்.

02 ஆம் பக்கத்தில்...







## சாணக்கியன் போன்ற இளைஞர்களை களமிறக்கியிருந்தால்

தமக்கு தலைவராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சுன்னாகத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் ‘தமிழர்தம் அபிலாசைகளில் சர்வதேச நாடுகளின் கரிசனை தொடர்பாக சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு’ என்ற தலைப்பில் சனிக்கிழமை மாலை 3 மணியள வில் நடைபெற்ற நிகழ்விலேயே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தலில் படித்த ஆற்றலுள்ள இளைஞர் களுக்கு முன்னுரிமை என்று நாங்கள் தீர்மா னித்தோம். ஆனால் அது வேட்புமனுவில் காணப்படவில்லை. 2022ஆம் ஆண்டு தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஒரு ஆண்டாக இருக்கலாம்.

சாணக்கியன் போன்ற ஐந்தாறு இளைஞர் களை நாங்கள் களமிறக்கியிருந்தால் நாட் டையே தலைகீழாக மாற்றி இருப்போம்

மாறுகின்ற உலகத்திலேயே நாங்கள் நிறைய மாற்றங்களை உள்வாங்க வேண்டும். சமஸ்டி என்ற சொல் அன்றும் இருந்தது இன்றும் இருக்கின்றது. ஆனால் சமஸ்டிக்கான விளக் கம் தற்போது மாறிவிட்டது.

சம்பந்தன் பிரித்தானிய உயர்ஸ்தானிகரை சந்தித்தபோது பிரித்தானியாவில் அன்றிருந் ததைப் போன்று இலங்கையிலும் யாப்பை அறிமுகப்படுத்தினீர்கள். ஆனால் இன்று உங்கள் நாடு எங்கேயோ சென்றுவிட்டது. ஆனால் எமது நாடோ பின்னோக்கி சென்று விட்டது என்றார்.

சம்பந்தன் அன்றைய சிந்தனையோடு இருக் கவில்லை. புதியதையும் உள்வாங்குகிறார். அதனாலேயே இன்றும் அவர் எமக்கு தலை வராக இருக்கின்றார்.

13க்கு அப்பால் நாங்கள் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும்போது, 13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அப்போதைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ 13க்கு அப் பால் சென்று அர்த்தபுஷ்டியான தீர்வைத் தருவோம் என்கிறார். ஆனால் சில தமிழ் கட்சி த் தலைவர்களோ 13ஆம் திருத்தத்தை அமுல் படுத்த கோருகின்றனர்.

13ஆம் திருத்தம் அடிப்படையிலேயே பழுதுபட்டது அதனை திருத்த முடியாது என இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்.

13ஆம் திருத்தத்தின் சில முக்கியமான நல்ல விடயங்கள் உள்ளன. அவற்றையும் உள்வாங்கி அதையும் தாண்டிய அதிகாரப்ப கிர்வை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம் என எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

## நாட்டில் மிகப் பெரிய பஞ்சம் ஏற்படும்

சங்கத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைக் கும் நிகழ்வில் இன்று கலந்துகொண்ட போது, செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதி லளித்த போது அவர் இதனைக் கூறியுள்ளார். இதன்போது மேலும் பதில் வழங்கிய அவர்,

‘அடுத்த சில வாரங்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிக்க முடியாத நிலைமைக்கு அரசாங்கம் மாறும். இதனை அடுத்து நாட்டிற்குள் கலவரமான நிலைமை ஏற்படும்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட் டத்திற்கு பின்னர், பிரதமர் தலைமையிலான அமைச்சரவையில் உள்ள அனைத்து அமைச் சர்களும் அரச தலைவரின் அடிமைகளாக மாறியுள்ளனர்.

தனி நபர் ஒருவர் நாட்டை ஆட்சி செய்யவே 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது என்றார்.

இதன்போது ஏழு மூளைகளைக் கொண்ட நிதியமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள தாக பேசப்படுகிறது. அவரால், நாட்டை கரை சேர்க்க முடியுமா என செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள விஜயதாச ராஜ பக்ச, நிதியமைச்சர் ஏழாலாம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றுள்ளதால், அவரை ஏழு மூளை கொண்டவர் கூறியிருக்கலாம் என தெரிவித்துள்ளார். ஆனால், நாட்டை கரை சேர்க்க அது போதுமானதல்ல என பதில் வழங்கியுள்ளார்.

## மொழி தெரிந்திருந்தால் யுத்தம் ஏற்பட்டிருக்காது

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்து பௌத்த கலாச்சாரப் பேரவையின் வடமா காண தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்ற இரண்டாம் மொழிக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங் கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் ஆட்சி சரியானதா என்ற கேள்விக்கு மத்தியில் பிரச்சினைகளை கூறுவதிலும் பார்க்க நாட் டில் உள்ள காணிகளை நாட்டு மக்களுக்கு வழங்குவதன் மூலம் பல பிரச்சினைகள் தீர்ந்து விடும். நாட்டில் முதுகெலும்பான விவசாயத் துறையை ஊக்குவிக்க, மக்களுக்கு காணி களை வழங்க வேண்டும்.

எரிவாயு அடுப்புகள் வெடிக்கிறது ஏன் ஒவ் வொருவரும் இயற்கை வாயுவை உற்பத்தி செய்ய முடியாது? வீட்டுக்கு ஒரு பசுவை வளர்த்தால் தொழில் முயற்சியை மேம்படுத் துவதோடு இயற்கை வாயுவையும் உற்பத்தி செய்யலாம்.

ஆகவே நாட்டை வழிநடத்துபர்களுக்கு இன்னும் மூன்று வருடங்கள் இருக்கிறது ஆகையால் மக்கள் சிறந்த முறையில் வாழ்வ தற்கு வழி அமைப்பார்கள் என நம்புகிறேன் என இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

## அரிசி உட்பட 50 வகையான பொருட்களின் விலை

வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை ,50 வகையான அத்தியாவசியப் பொருட்களை ,சதொச மூலம் இன்று முதல் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மூதூரில் குண்டு வெடிப்பு 15 வயது சிறுவன் பலி

நேற்று (12) பிற்பகல் இடம்பெற்ற சம்ப வம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தங்களது வீட்டில் வளர்க்கும் ஆடுகளுக்கு இலை,குழை வெட்டுவதற்காக, அருகிலி ருக்கும் பாலடைந்த இடத்துக்குச் சென் றுள்ளான்.

அங்கு, மரமொன்றின் கிளைகளை வெட் டிக்கொண்டிருந்த போதே, குண்டு போன்ற ஒன்று வெடித்துச்சிதறியுள்ளது என பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், கடுமையான காயமடைந்த சிறுவன், தோப்பூர் வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது மரணமடைந்துவிட்டார் என்றும், அவ ருடைய சடலம் அந்த வைத்தியசாலையின் சவச்சாலையிலேயே வைக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## இதுவா ஆசியாவின் ஆச்சரியம்

அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

நத்தார் தினமன்று மதுபானம் விற்பனை செய்வதற்கு சுற்றுலாத்துறை அமைச்சினால் அனுமதி பெற்றுக்கொண்ட ஹோட்டல்க ளுக்கு அனுமதி வழங்குமாறு கோரப்பட் டுள்ளது. வெசாக் பௌர்ணமிக்கு மதுபான விற்பனை தடையென்றால் நத்தார் பண்டி கையிலும் தடை செய்ய வேண்டும் என்ப தனை சுற்றுலாத்துறை அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலு டன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்றே தெரிகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த அரச தலைவர் விசாரணைக் குழுவில் பெயர் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், இதுவரையில் எவரிடமும் விசா ரணை செய்யப்படவில்லை. நாடகம் நடிக் கப்படுகின்றது.

எந்தவொரு அரசியல் தலைவரும் மதக் கொள்கைகளை விடவும் உயர்ந்தவர்கள் கிடையாது என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

## புன்னக்குடா விகாராதிபதியை இடமாற்றக்கோரி

ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதியில் ஆர்ப் பாட்டம் ஒன்று மேற்கொண்டனர்.

புன்னக்குடா பகுதியில் உள்ள புன்னியாராஜ விகாரையின் விகாராதிபதி தம்பக்கல வன ரத்ன தேரர் அவர்களை குறித்த விகாரையில் இருந்து இடம்மாற்றும் படியே குறித்த பகுதி யில் வாழும் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த சில மாதங்களுக்கு முன் குறித்த விகாரையில் சிறுவன் ஒருவரை இத் தேரர் துஸ்பிரயோகப்படுத்தி பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்.

தமக்கு இவர் தேவை இல்லை எனவும் வழி பாட்டிற்கு விகாரைக்கு செல்ல பிள்ளைகள் அச்சப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந் துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

புன்னக்குடா பகுதியில் சுமார் 20 சிங்கள குடும்பங்கள் கடல் பிரதேசத்தை அண்டி வாழ்ந்து வருகின்றனர்.சுமார் 01 மணி நேரம் இன்றைய ஆர்ப்பாட்டத்தினை குறித்த பகுதி சிங்கள மக்கள் மேற்கொண்டிருந்ததுடன் கையில் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதா தைகளை ஏந்தியிருந்ததுடன் கறுப்பு கொடி களையும் கையில் தாங்கி இருந்தனர்.

இதில் ஏறாவூர் பற்று பிரதேச சபையின் உறுப்பினர் வனேந்திரன் சுரேந்திரனும் குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு மக்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தார்.

## சமஸ்டியே தீர்வு, அதனை அடைந்தே தீருவோம்

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், அதனை என்றோ ஒரு நாள் அடைந்தே தீரு வோம் என சூளுரைத்துள்ளார்.

இதன்போது, தமிழர்களின் நிரந்தர தீர் வைப் பெற்றுக்கொள்ளும் வரையில், சட்டப் புத்தகத்தில் இருக்கும் 13ஐ நடைமுறைப்ப டுத்துங்கள் என்பதே தமது கோரிக்கை எனத் தெரிவித்தார். அத்துடன், 13ஆவது திருத்தம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## 13 ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு கோரி

கூட்டாக கடிதம் அனுப்புவதற்கு தமிழ், முஸ்லிம் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலை வர்களுக்கு இடையில் கொழும்பில் கலந்து ரையாடலொன்று நடைபெற்றது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களான இரா. சம்பந்தன், ரவூப் ஹக்கீம், சி.வி. விக் னேஸ்வரன், மனோ கணேசன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்டோர் இதில் கலந் துகொண்டிருந்தனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என ஆரம்பிக்கப் பட்ட குழுவின் முதலாவது அமர்வு கடந்த மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடை பெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தரப்பிலிருந்து அன்று எவரும் கலந்துகொள்ளவில்லை.

எனினும், இரண்டாவது சந்திப்பிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொண்டிருக்கவில்லை.

இவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் கலந்துரையாடவுள்ளனர்.

## இரவோடிரவாக சங்குமண்கண்டியில் அமர்ந்த புத்தர் சிலை

திடிரென வைக்கப்பட்ட புத்தர் சிலை யால் நேற்றுக்காலைமுதல் இப்பிரதேசத்தில் முறுகல் நிலைமை ஏற்பட்டதுடன், இச்செ யற்பாட்டைக்கண்டித்து இப்பிரதேச மக்கள் எதிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெருமளவு பொலிசாரும் குவிக்கப்பட் டனர். திருக்கோவில், பொத்துவில் பிரதேச பொலிஸ் அதிகாரிகள் உதவிபொலிஸ்அத் தியட்சகர் ,பொலிஸ்அத்தியட்சகர் என பொலிஸ் உயரதிகாரிகளும் அங்கு நின்றிருந் தனர்.

இதனையறிந்த இப்பிரதேச பொதுமக்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகள் அதிகாலை 5மணி முதல் இங்கு ஒன்று கூடி நில ஆக்கிரமிப் பாளர்களின் இச்செயற்பாட்டைக்கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொத்துவில் கல்முனை பிரதான வீதி யில் தாண்டியடிக்கும் சங்கமங்கண்டிக்கும் இடையிலான பிரதேசத்திலுள்ள காட்டுப்பி ரதேசத்திலேயே இவ்வாறு புத்தர் சிலை திடீ ரென வைக்கப்பட்டுள்ளதுடன் பொத்துவில் பிரதேசத்திலுள்ள பிக்குகள் சிலரும் இங்கு காணப்பட்டனர்.

பிரதானவீதியினருகே 5அடி உயரஇரும்புத் தாங்கியில் 3அடி உயர வெண்ணிற புத்தர்சிலை வைக்கப்பட்டிருந்தது. முன்னால் கம்பங்களில் பௌத்தகொடிகள் கட்டப்பட்டிருந்தன.

பொத்துவில் முஹுது மஹாவிகாரை விகாராதிபதி வண.உடதம்பல ரத்னபிரிய தலைமையிலான 08 பிக்குமார் அங்கு சிலைக் கருகாமையிலுள்ள காடுமண்டியபற்றைக்குள் நின்றிருந்தனர்.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கமை வாக காலை 9மணியளவில் அங்குவந்த காரை தீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் பொலிசாருடன் பேசியபின்னர் பொத்துவில் முஹுதுமஹாவிகாரை விகா ராதிபதி வண.உடதம்பல ரத்னபிரியவுடன் பேசினார்.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ண பிள்ளை ஜெயசிறில்கூறுகையில்:

‘இது 100வீதம் வாழ்கின்ற தனித்தமிழ்ப் பிரதேசம். இங்கு புத்தர்சிலை வைப்பதன் நோக்கம் என்ன? இரவோடிரவாக சிலை வைக் கப்பட்டதனால் இங்கு பதட்டம்நிலவுகிறது. நாம் புத்தரை மதிக்கிறோம்.அவர் பிறப்பால் ஒரு இந்து.அவரது போதனைகள் மக்களை நல்வழிப்படுத்தவந்தவையே.

அவரைவைத்து இந்த நாடகம் ஆடுவது முறையல்ல.மதவெறி இந்தநாட்டை அழித் துவிடும். ஜனாதிபதி பிரதமருக்கும் இதனை தெரியப்படுத்துகிறோம். நாங்கள் இந்நாட்டுப் பிரஜை. நாம் சுதந்நதிரமாக வாழமுடியாதா? பௌத்ததுறவிகள் நிதானமாக அமைதியாக பேசவேண்டும். இவ்வாறு உறுக்கி சண்டித்த னம் காட்டமுற்படக்கூடாது. எமக்கு இரத்தம் கொதிக்கிறது.எனினும் தெய்வம் மதகுரு என் பதனால் பொறுமையை கடைப்பிடிக்கிறோம்.

எமது இந்துமதகுருவொருவர் தனிச்சிங்கள் பகுதியில் பிள்ளையார்சிலையொன்றைக் கொண்டுவைத்தால் சும்மா விடுவார்களா? பாதுகாப்புபடையினர் பொலிசார் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்புவழங்கவேண்டும். சட்டத்தை நீதியை சரியாக கடைப்பிடிக்க வேண்டும். சட்டரீதியற்றமுறையில் வைக்கப் பட்ட இச்சிலையை அவர்களே அகற்றியருக் கலாம்.இனமுறுகலுக்கும் இது வழிவகுக் கும். எனவே எவ்வித அனுமதியுமில்லாமல் இரவோடிரவாக கள்ளக்களவாக வைத்த சி லையை அகற்றுமாறு வேண்டுகிறோம் ’என்று தவிசாளர் ஜெயசிறில் கூறினார்.

பதிலுக்கு வண.உடதம்பல ரத்னபிரிய ஆக்ரோசமாகக்கூறுகையில்: இது பௌத்த நாடு. நாம் எங்கும் சிலை வைப்போம். இந்த இடத்தில் 2500ஆண்டுகளுக்கு முன்னும் சி ங்களபௌத்தர்கள் இருந்துள்ளனர்.அருகில் தொல்பொருள்இடமுள்ளது.பௌத்தர்கள் தான் இவ்விடத்தின் பூர்வீகமக்கள். சிலையை அகற்றமுடியாது. என்றார்.

தவிசாளர் ஜெயசிறில் தேரருடன் நடாத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தத தையடுத்து சிலைக்கு முன்பாக கொழுத்தும் வெயிலில் தரையில் அவரே முதலில் அமர்ந் தார்.

அவருடன் ஜெயசிறில் திருக்கோவில் பிர தேச சபை தவிசாளர் இ.வி.கமலராஜன் பொத் துவில் பிரதேச சபை தவிசாளர் ஏ.றஹீம் உபதவிசாளர் பி.பார்த்தீபன் உறுப்பினர் த.சுபோதரன் ஆகியோரும் அமர்ந்தனர். ஊட கங்களுக்கும் கருத்துத்தெரிவித்தனர்.

திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி.கமலராஜன் கூறுகையில்: 100வீத தமிழ்மக்கள் வாழுகின்ற இடம். மக்களின் விருப்பமின்றி சட்டத்திற்கு முரணாக மதவழி பாட்டுதலங்களை இவ்வாறு நிறுவமுடியாது. இலங்கைசட்டம் பொதுவானது.சாதிக்கொரு நீதியல்ல. சட்டமுறையற்ற நடவடிக்கையை எதிர்க்கிறோம். எனவே இது விடயத்தில் நீ தியை தருமாறு சகல அதிகாரிகளையும வேண் டுகிறேன்.என்றார்.

பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் ஏ.றஹீம் கூறுகையில்:

எமது பிரதேசத்தில் இவ்வாறான முரண்பாட் டுக்குரிய செயல் இடம்பெறுவது நல்லதல்ல. எமது சபையால் எந்த அனுமதியும் வழங்கவில் லை. அவர்களிடம் இந்த சிலையை வைக்க எந்த ஆவணமும் இல்லை.

பொலிசாரிடமும் கூறியுள்ளோன். கடந்த வாரம் எமது பொத்துவிலுக்கு வந்த ஒரேநாடு ஒரேசட்ட தலைவர் ஞானசாரதேரர் வந்து செ ங்காம தமிழ்மக்களுக்கு தண்ணியில்லை அது இல்லை இதுஇல்லை அதை வழங்கவேண்டும் என்றபோர்வையில் உரக்ககுரல்கொடுத்தார்.

அன்று அப்படி சிறுபான்மைக்கு குரல் கொடுப்பதுபோல கொடுத்துவிட்டு இன்று அதே அணியிளர் அந்த மக்களின் காணியில் இடத்தில் அடாத்தாக சிலைவைத்து குழப் பத்தை ஏற்படுத்தமுயல்வதை பார்க்கிறோம். சிறுபான்மைமக்களுக்கு இதுவொருபாடம். அவர்கள் நேரத்துக்குதகுந்தால்போல் சி றுபான்மையடி பயன்படுத்துகிறர்கள். இனி யாவது எமது மக்கள் இவ்வாறானவர்களுக்கு பின்னால் செல்லக்கூடாது என்பதே இன்றைய செய்தியாம்.

பிரதேசசெயலரிடமும் பேசியுள்ளேன். அவருக்கு இந்த இரண்டரை ஏக்கர் காணியை கேட்டு அனுமதிகேட்டு பிக்குமார் எழுதியுள்ள னர். ஆனால் அவர் அனுமதிவழங்கவில்லை. எனவே 100வீதம் தமிழ்மக்கள் வாழும் இப்ப குதியில் அரசகாணியாகவிருந்தாலும் சட்டப் படி ஆவணங்களுடன் செயற்படவேண்டும். இங்கு எந்த ஆவணமும் இல்லை. எனவே உரியஅதிகாரிகள் நீதியைபெற்றுத்தருவார்க ளென நம்புகிறேன் என்றார்.

பொத்துவில் உபதவிசாளரும் தொழிலதிப ருமான பெருமாள் பார்த்தீபன் கூறுகையில்: இதுவரை மயானப்பகுதியில் 2தடவைகள் சி லைவைக்க இதே பிக்குமார் முயற்சிசெய்த னர். மக்களாகசேர்ந்து விரட்டினோம். அது பகலில் நடந்தவை. ஆனால் இது இரவோடிர வாக வைக்கப்பட்ட சிலை.ஒரு பௌத்தர்கூட இங்கு வாழவில்லை. விறகுவெட்டி வாழும் எமது ஏழைத்தமிழ் மக்கள் இங்குள்ளனர். எனினும் இச்சிலை வைப்பை நாம் அனும திக்கப்போதில்லை. சிலை அகற்றியபின்னரே நாம் வெளியேறுவோம்.என்றார்.

சிலை அகற்றப்படும் வரை இங்கிருந்து நகரப்போவதில்லையென போராட்டத்தில் ஈடுபட்டோர் சூளுரைத்துள்ளனர். 12மணிக் குப்பின்னர் வீதியை மறித்து பேராடட்ட நிலை மறுவடிவம் எடுக்கும் என சத்தியாக்கிரகத்திலீ டுபட்டோர் தெரிவித்தனர்.

பகல் 11.30மணியளவில் பொத்துவில் பிரதே சசெயலாளர் சந்துருவன் அங்குவந்து பௌத்த பிக்குமாருடன் கலந்துரையாடி மேலிடத் திற்கும் அறிவித்து கலந்துரையாடினார். அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் உடன்தொடர்புகொண்டு இனமுறுகலை குழப்பத்தை தவிர்க்குமாறும் சிலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக் குமாறும் பிரதேசசெயலாளர் மற்றும் பொலிச ாரை அறிவுறுத்தினார்.

பகல் 12.15மணியளவில் பொலிஸ் உயரதி காரி பிரதேசசெயலாளர் சந்தருவன் அகியோர் பொதுமக்களிடம் சிலை மேலிடத்து உத்தர விற்கமைவாக அகற்றப்படும் எனவே குழப் பமின்றி கலைந்துசெல்லுங்கள். என்றனர். சிலை அகற்றப்படும்வரை நாம் இங்கிருந்து செல்லமாட்டோம்.சுட்டால் சுடுங்கள் என்று மக்கள் அடம்பிடித்தனர்.

அச்சமயம் பிகுமாரை அங்கிருந்து அகலு மாறு பொலிசார் கேட்க அவர்கள் அங்கிருந்து சிலையை பௌத்தகொடிகளை அகற்றாமலே பகல் 1மணியவில் வெளியேறினர்.அதனை யடுத்து 1.30மணியளவில் பொதுமக்களும் வெளியேறினர்.

இறுதியாக இரவுவரை சிலையும் காவலுக்கு பொலிசார் இருவரும் நின்றிருந்தனர். ஏனைய அனைவரும் கலைந்துசென்றனர்.இரவு விசே டஅதிரபடிப்படையினர் காவலுக்கு நின்றி ருந்தனர்.

எனினும் நேற்று நள்ளிரவு சிலை அகற்றப் பட்டிருப்பதாக அதிகாலையில் செய்திகள் உறுதிப்படுத்தியது. ஆனால் சிலைவைத்தி ருந்த 5அடி உயரஇரும்புத் தாங்கியும் நடப் பட்ட பௌத்தகொடிகளும் இப்போதும் அங்கேயே இருக்கின்றன.

அதாவது 3வது தடவையாக அப்பிரதேசத் தில் சிலை வைக்களடுத்த முயற்சியும் தோல் வியில் நிறைவடைந்துள்ளது.

# சங்கமான் கண்டிப் பிரதேசத்தில் புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளமை தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் குழப்பத்தினை ஏற்படுத்துவதாக அமையும்

(எஸ்.சபேசன்)

பொத்துவில் சங்கமான் கண்டிப் பிரதேசத்தில் புத்தர்சிலை வைக்கப் பட்டுள்ளமை இந்நாட்டில் இடம் பெறுகின்ற அஜாரகச் செயற்பாடக இருப்பகதுடன் இந்நாட்டில் வாழு கின்ற தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் மீண்டும் ஒரு குழப்பத்தினை ஏற்படுத்துவ தற்கான செயலாகவே இதனைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் த. கலைய ரசன் தெரிவித்தார்.

சனிக்கிழமை 11 ஆம் திகதி அதி காலை வேளையிலே பொத்து வில் பிரதேச செயலாளர் பிரிவில் சங்குமான்கண்டி மலையில் புத்தர்சி லையினை வைத்துள்ளமையினைக் கண்டித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரி வித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் சங்குமான்கண்டி மலையில் நான்கு பௌத்தகுருமார் புத்தர்சிலை ஒன் றினை சனிக்கிழமை அதிகாலை வைத்துள்ளார்கள் இதற்கு முன்ன ரும் இப்பிரதேசத்தில் புத்தர் சிலை வைப்பதற்கான நடவடிக்கைகள் பலதடவை மேற்கொள்ளப்பட்ட போதும் மக்களது கடும் எதிர்ப்பி னால் கைவிடப்பட்ட வரலாறுகளும் அதிகம் உண்டு.

இன்று அந்த இடத்தில் புத்தர்சி லையினை வைத்து இருக்கின்றார்கள் இந்தப்பிரதேசம் முற்றுமுழுதாக தமிழர்கள் வாழுகின்ற பிரதேசம் இந்நாட்டில் இடம்பெறுகின்ற அஜா



ரகச்செயற்பாடக இருப்பகதுடன் இந்நாட்டில் வாழுகின்ற தமிழ்மக்க ளையும் சிங்கள மக்களுக்கும் இடை யில் மீண்டும் ஒரு குழப்பத்தினை ஏற்படுத்துவதற்கான செயலாகவே இதனைப் பார்க்கக்கூடியதாக இருக் கின்றது இனங்களுக்கு இடையில் குழப்பத்தினை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக மதத்தலைவர்கள் செயற்படுவது வேதனையான விட யமாகும் வனபரிபாலன சபைக்குச் சொந்தமான காணிஎனக்கூறி அவ்வி டங்களில் புத்தர் சிலைகளை வைப் பதற்கு முயற்சிகளை மேற்கொண் டால் நாட்டில் உள்ள அனைத்து அர சகாணிகளிலும் புத்தர்சிலைகளை வைப்பதற்கு அரசு உடந்தையாக இருக்கின்றதா அதாவது தமிழ் மக்கள் முழுமையாக வாழும் பகு திகளில் இவ்வாறன செயற்பாடுகள் மேற்கொள்வது அத்துமீறிய நில அபகரிப்பாக இருக்கின்றதா என்ற கேள்வி தமிழ் மக்களிடம் எழுகின் றது. இவ்வாறாக மத குருமார்கள் நினைத்த இடங்களில் மத நடவ டிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த நாட்டின் சட்டம் இடம்கொ டுக்கிறதா. இந்த நாட்டை மீண்டும் ஒரு குழப்பகரமான சூழலுக்குள் தள்ளுவதற்கான நடவடிக்கைகளை அரசுமேற்கொள்ளுகின்றதா இனங் களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தி சமாதானமற்ற பிரதேச மாக மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர் இந்தப் பின்ன ணியில் அரசாங்கமும் இருக்கிறது

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது இந்தநாடு பௌத்தநாடு என்ற அடிப்படையில் ஆட்சி நடைபெற வேண்டும் எனத்தெரிவித்திருந்தனர் அதன் அடிப்படையில்தான் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றது.

இந்த விடயம் சாதாரணவிடயமாக நாங்கள் பார்க்கமுடியாது வடகிழக் குப்பிரதேசங்களில் இவ்வாறான செயற்பாடுகள்நடைபெற்றுக்கொண் டிருக்கின்றது.

இந்தவிடயம் தொடர்பாக அதி காரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது இப்பகுதி வனபரி பாலன சபைக்குரியதும் அதில் 2 ஏக்கர் பௌத்த மதகுரு ஒருவருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்தது இது வேதனையான விடயம் வனபரிபாலன சபையானது தாங்கள் விரும்பிய பெரும்பான்மையின ருக்கு காணிகளை வழங்குவது ஏற் றுக்கொள்ளமுடியாது இவ்வாறான செயற்பாட்டினை வண்மையாகக் கண்டிப்பதுடன் இவ்வாறு நடை பெறுவது இந்நாட்டில் மோசமான சூழலை உருவாக்கும் எனவும் தெரி வித்தார்.

## தடம்மாறா தமிழ்த்தேசியத்தின் திடம் கொண்ட உத்தமர்!

ஆண்ட தமிழ்ஊர் ஆரையம்பதி மண்ணில்!
ஆண்டு ஐம்பத்தி இரண்டு மே பதினெட்டில்.!
அவதரித்த ஆளுமைத்தமிழன் வே.தவராசா அவர்கள்!
இரண்டாயிரத்து டிசம்பர் பத்தில் இறையடி சேர்ந்தார்!
அறுபத்து ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்து ஆகுதியானார்!

பிறப்பில் இருந்து இறப்பு நாள் வரைக்கும்!
இருப்பு தமிழர்க்கு வடகிழக்கு தாயகம் என்று!
இதயத்தால் நேசித்த இனப்பற்றுப்புனிதர்!
எம்மண்ணின் விடியலை எப்பவுமே நேசித்தார்!
எமைவிட்டுப்பிரிந்ததால் ஏங்குதே எம் மனம்!

ஆசிரியர் பணியால் மாணாக்கர் கல்வி வளர்ந்தது!
ஆற்றல் உழைப்பால் சமூகத்தின் சேவை உயர்ந்தது!
ஆளுமை அவர் என்பதால் அனைத்தும் சிறந்தது!
பேச்சுத்திறனால் சபை எல்லாம் அதிர்ந்தது!
அவர் மூச்சு நின்றதால் எங்கள் கண்ணீரும் சொரிந்தது!

கலை இலக்கிய முத்தமிழ் காவலர் இவர்!
கணித பாடத்தின் கைதேர்ந்த அறிவொளி!
கல்வியை வளர்த்ததில் காருணிய மனிதர்!
கன்னித்தமிழிழை உயிராய் மதித்த மகான்!
மண்ணில் மறைந்தாரே மறப்போமா நாங்கள்!

போற்றுதற்கு உரியவர் பொறாமை அற்ற பெரியவர்!
பார்பதற்கு கம்பீரம் பார்வையிலும் நேர்மை!
தோற்றத்திலும் உறுதிமேனி தோள்களிலும் வீரம்!
வாட்டமில்லா நிமிர்நடை வார்த்தைகளில் உண்மை!
தேட்டமெலாம் தமிழே என்று தேசியத்தின் பற்றாளர்!

நேற்றுவரை இருந்தமகான் நினைவிழந்து துகில்கின்றார்!
காற்றில் உயிரை காலன் எடுத்துச்சென்றமையால்!
கரம்பிடித்த அன்பு மனைவி ஆருயிர் பிள்ளைகளும்!
பாசமருமக்கள் பேரக்குழந்தைகள் உற்றார் உறவுகளும்
கட்டித்தழுவி ஒப்பாரி வைத்து ஓலமிடுகின்றனர்!

கொள்கைப்பற்றாளர் கொடுமைக்கோ இவர் எதிரி!
அல்லல் வந்தகாலத்திலும் அடிமையை விரட்டியவர்!
வள்ளல் மனம் படைத்த வாய்மை தவறா புனிதர்!
எல்லை இல்லா நற்பணிகள் எம்மண்ணில் விதைத்தவர்!
எப்போதும் தமிழ் உணர்வால் எம்முன்னே வாழ்ந்தவர்!

இலங்கை தமிழரசுக்கட்சியின் ஆயுள்கால செயல் வீரன்!
இனப்பற்றுக்கொண்ட மட்டு மாநகரசபையின் உறுப்பினர்!
மட்டக்களப்பு தமிழ்சங்கத்தின் மட்டற்ற செயலாளர்!
தடம்மாறா தமிழ்தேசியத்தின் திடம் கொண்ட உத்தமர்!
விடைபெற்றுச்சென்றாரே விடியும் நாள் காணும் முன்னே!

-அம்பிளாந்துறையூர் அரியம்-

## கோட்டகலையில் கேஸ் அடுப்பு வெடிப்பு சம்பவம்



(க.கிஷாந்தன்)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ பிரி வில் உள்ள வீடு ஒன்றில் கேஸ் அடுப்பு ஒன்று வெடித்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ள தாக திம்புள்ள பத்தனை பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

தேநீர் தயாரிப்பதற்காக கேஸ் அடுப்பை பற்ற வைத்துள்ளனர். 5 நிமிடங்களுக்கு பிறகு கேஸ் அடுப்பு வெடிப்பு ஏற்பட்டுள்ள தாக வீட்டாளர்கள் தெரிவித்த னர்.

வெடிப்பை அடுத்து கேஸ் அடுப்பு முழுமையாக சேதம மைந்துள்ளதுடன், அதன்பின்னர் கேஸ் சிலிண்டர் உள்ளிட்ட உபக ரணங்களை அகற்ற நடவடிக்கை எடுத்தாக வீட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாழைச்சேனையில் இரண்டு நாட்களில் நான்கு கேஸ் அடுப்பு வெடிப்பு

(ந.குகதர்சன்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு நாட்களில் நான்கு கேஸ் அடுப்புகள் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சே னை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி லசந்த பண்டார தெரி வித்தார்.

அந்தவகையில் வாழைச்சே னை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் இரண்டு கேஸ் அடுப்புகள், ஓட் டமாவடி மற்றும் வாழைச்சே னை பகுதியில் தலா ஒரு கேஸ் அடுப்புகள் என நான்கு கேஸ் அடுப்புகள் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை உடைந்து சேதமாகியுள்ளது.

இந்த நிலையில் குறித்த வீட் டில் இருந்தவர்கள் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்பட வில்லை என்றும், கேஸ் அடுப் புக்கள் மாத்திரமே வெடித்துள்ள தாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

எரிவாயு அடுப்புக்கள் அண் மைக்காலமாக நாடளாவிய ரீதியில் வெடிப்பதால் மக்கள் அவதானமாகவும், முன் எச்சரிக் கையுடனும் இருந்தமையால் உயிர்பாதிப்புக்கள் இடம்பெறாத வண்ணம் காணப்படுகின்றது.

## கிராமத்திற்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்

(ந.குகதர்சன்)





ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மாநகர் கிராமத்தில் இரவு வேளைகளில் யானைகள்வருகைதந்து தோட்டப் பயிர்கள்; மற்றும் குடிசைகளை சேதமாக்கி செல்வதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மஜ்மா கிழக்கு மற் றும் மேற்கு கிராமத்தில் வாழும் மக்கள்தங்களது காணியில் பயன்தரும் மரங்கள், மரவள்ளி தோட்டங்கள் செய்து பராமரித்து வரும் நிலை யில் இரவு வேளைகளில் வாழைச்சேனை காகித ஆலை காட்டுப் பகு தியின் ஊடாக வரும் யானைகள் தொடர்ச் சியாக எங்களது பயிர் களை சேதப்படுத்தி செல்லும் நிலைமை காணப்படுகின்றது.

இரவு வேளையில் வாழைச்சேனை காகித ஆலை காட்டுப் பகுதி யின் ஊடாக கிராமத் திற்கு வருகை தந்த யானைகள் தென்னை மரம், மரவள்ளி தோட் டம், வீட்டுப் பயிர்கள் மற்றும் வேலிகளை சேதப்படுத்துடன், எங் களது உயிர்களுக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை காணப்படுகின் றது. வாழைச்சேனை காகித ஆலை காட்டுப் பகுதியினை அண்டி யதாக மஜ்மா கிழக்கு மற்றும் மேற்கு கிராமம் அமைந்துள்ள நிலை யில் குறித்த காட்டுப் பகுதிக்கு வரும் யானை எமது கிராமத்திற்கு வந்து பயிர்களை சேதப் படுத்தி செல்கின்றது.

காகித ஆலை வீதி யால் எமது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்கின் றனர். அத்தோடு விவச ாய செய்கைக்கும் பலர் செல்கின்றனர். குறித்த காட்டுக்குள் இருக்கும் யானைகள் இருப்ப தால் அதனால் பயணிப் பவர்கள் அச்சத்துடன் பயணிக்கின்றனர். இவ் விடயமாக அரசியல்வா திகளுக்கு தெரிவித்தால் கரிசனை கொள்வதில் லை. ஆனால் யாரும் யானைஅடித்து உயிரிழந் தால் வந்து புகைப்படம் எடுத்து வெளியிடங்க ளுக்கு காட்டுவதற்கு நடித்துவிட்டு செல்கின்ற னரேதவிர எந்த நடவடிக் கையும் எடுப்பதில்லை. குறித்த பகுதி மிகவும் இருள் நிறைந்து காணப் படுகின்றது. இங்கு வீதி மின்விளக்குகளை அமைத்து தருமாறு ஓட் டமாவடி பிரதேச சபை யிடம் முறையிட்டும் இதுவரை எந்த பலனும் இல்லை.

எனவே ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மா கிழக்கு மற்றும் மேற்கு கிராம மக்கள் அச்சமின்றி வாழ் வதற்கும், பயிர்களை யானைகள் சேதம் செய் யாது எமது பகுதியை சுற்றி யானைகளிடம் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு யானை வேலிகளை அமைத்து தருமாறும், வீதி மின் விளக்குளை பொறுத்தி தருமாறும் பாதிக்கப் பட்ட மக்கள் சம்மந்தப் பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக் கின்றனர்.

## திருமலை மாவட்ட உளவளத்துணையாளர்களின் வலையமைப்பு அங்குரார்ப்பணம்





(ஹஸ்பர் ஏ ஹலீம்)



அண்மைக்காலமாக ஏற்பட் டுவரும் அசாதாரண சூழ்நிலை மற் றும் நீண்ட கால தேவைப்பாடாக உள்ள உளவளத்துணையாளர்க ளின் சேவைகளை ஒருமுகப்படுத்தி வலைப்பின்னலாக்கும் நோக்கில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உளவளத்துணையாளர்களை ஒன்று படுத்தும் நிகழ்வு திருகோண மலை மாவட்ட எஹேட் ஹரிதாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் அருட்தந்தை டன்ஸ் டன் அவர்களின் தலைமையில் கிண்ணியா பிரதேச செயலாளர் .எம்.ஏ.அனஸ் அவர்கள் அதிதியாக கலந்து கொண்ட நிகழ்வு (10) வெள்ளிக்கிழமை மாலை கிண் ணியா பொது நூலக மண்டப கோட் போர் கூடத்தில் இடம் பெற்றது .

இதன்போது உளவளத்துணை யின் அவசியம் குறித்து பணிப் பாளர் சுட்டிக்காட்டியதுடன் பிர தேச செயலாளர் ஒன்றினைந்த கூட்டுச்செயல்பாட்டின் அவசியம் பற்றி குறிப்பிட்டதுடன் கலந்து கொண்ட உளவளத்துணையார்க ளுடன் எதிர் காலத்தில் எவ்வாறு செயற்படுவது குறித்த கலந்து ரையாடல் இடம்பெற்றதுடன் மாவட்டத்தில் உள்ள பிரதேச செய லாளர் பிரிவுக்குமான தற்காலிக தொடர்பாளர்கள் தெரிவு செய்யப் பட்டதுடன் ஒரு வாரகாலத்தினுல் அனைத்து பிரதேச செயலக பிரி வையும் உள்ளடக்கிய மாவட்ட நிர்வாகம் தெரிவுசெய்யப்பட வுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் போது 35 க்கும் மேற்பட்ட உளவளத்துணையாளர்கள் கலந்து கொண்டனர்

குறித்த இந் நிகழ்வில் எஹேட் ஹரித்தாஸ் நிறுவனத்தின் முகாமை யாளர் பிரான்சிஸ் திட்ட இணைப் பாளர் றிஸ்மி கிண்ணியா ஜம்மிய் யத்துல் உலமா சபை தலைவர் அஷ்ஷெய்ஹ் ஏ.எம்.ஹிதாயதுல் லாஹ் நளீமி, மாவட்ட செயலக உளசமூக உத்தியோகத்தர் எம்.எம். எம்.ஷம்சீத் மற்றும் உளவளத்து ணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மன்னாரில் தூண்டில் மூலம் மீன்பிடிக்குச் சென்ற இரு மீனவர்களை காணவில்லை

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் சவூத்பார் கடற் பரப்பி லிருந்து தென் கடல் பிராந்தியத்தில் தூண்டில் மூலம் மீன் பிடிப்பதற்காக ஒரு படகில் சென்ற இரு மீனவர்கள் வழமைபோன்று கரை திரும்பாத தால் இவர்களை தேடுவதில் ஈடுபட் டுள்ளனர்.

இவ் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (12.12.2021) காலை இடம்பெற் றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதா வது; யாழ் பகுதியைச் சேர்ந்த விஜய் சங்கர் மற்றும் ராதீபன் என்ற இரு மீனவர்கள் மன்னார் தாராபுரத்தில் தங் கியிருந்து மன்னார் சவுத்பார் கடற்கரை பகுதியிலிருந்து மன்னார் தென் கடல் பரப்பில் தூண்டில் மூலம் மீன்பிடிக் காக ஔவ்ஆர்பி-ஏ-3163 எம்என்ஆர் என்ற வெளிக்கள இயந்திர படகொன் றில் ஞாயிற்றுக்கிழமை (12.12.2021) காலை புறப்பட்டு சென்றுள்ளனர்.

இவர்கள் வழமையாக கரைக்கு திரும்பும் நேரத்தில் கரை திரும்பாமை யால் இது தொடர்பாக பொலிசிலும் மன்னார் கடற்தொழில் திணைக்களத் துக்கும் முறையீடு செய்துள்ளனர்.

தற்பொழுது இவர்களை தேடும் பணியில் மீனவர்களும் கடற்படை யினரும் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.


வெகுவிரைவில்
கோலாகலமாக
திறக்கப்பட உள்ள
Asiatischer Lebensmittelladen
IMPORTAS
200+பார்க்கிங் வசதியுடன்
HIGHWAY யிலிருந்து 700M தூரம் மட்டுமே!
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch


Offer From
18.12.2021 to 15.01.2022
(Unsere Öffnungszeiten während der Feiertage finden Sie auf der Rückseite)
மாபெரும்
அதிரடி மலிவு விற்பனை
IMPORTAS Cash & Carry
Bern & Zürich
Merry Christmas
& HAPPY NEW YEAR
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புது வருட
தை திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்
Free* ab 300 CHF
CHF 300 க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
CHF 39.90 பெறுமதியான
Rice Cooker இலவசம்.
18.12.2021 தொடக்கம் 31.12.2021 வரையே
CHF 119.-
CHF 60.-
அதிரடி விலையில்
V Box கொள்வனவு
செய்பவர்களுக்கு
50% விலைக்கழிவு.
Nur solange Vorrat reicht.
Einkaufswert ab 300 Fr. Subash Rice Cooker free.

# 2021 ஆம் ஆண்டின் ஊழலுக்கெதிரான சர்வதேச தினத்தில் Apesalli.lk எனும் இணையத்தளம் அறிமுகம்

**(சில்மியா யூசுப்)**

2021 ஆம் ஆண்டின் ஊழலுக்கெதிரான சர்வதேச தினத்தில் Apesalli.lk எனும் இணையத்தளத்தினை அறிமுகம் செய்கிறது ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம்

கடந்த இரண்டு வருடங்களில் கொவிட்-19 தொற்றுப்பரவல் காரணமாக உலகம் முழுவதும் ஊழல் செயற்பாடுகள் அதிகரித்துள்ளது. ஊழலுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்ற போது ஊழலின் பாதகமான விளைவுகள் மக்களை மிக மோசமான முறையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

2021ம் ஆண்டை பொறுத்தவரையில் இலங்கையில் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையும் நிலவுகின்ற இந்த இக்கட்டான தொற்றுப்பரவல் காலப்பகுதியில் மக்கள் தமது வாழ்வாதாரத்தை இயன்றளவு கொண்டு நாடாத்த முயல்கின்ற இவ்வேளையில், ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சம்பவங்கள் ஏராளமாக அதிகரித்துள்ளன. இந்த விடயத்தினை பின்னணியாகக் கொண்டு ட்ரான்ஸ் பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா (TISL) நிறுவனமானது ஊழலுக்கெதிரான சர்வதேச தினமான (டிசம்பர் 09) ல் இவ்விடயத்தினை முன்னிலைப்படுத்தி அடையாளப்படுத்துகிறது. நாட்டின் பொது வளங்களை தவறாக பயன்படுத்தல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்தி ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனமானது இவ்வாண்டின் ஊழலுக்கெதிரான சர்வதேச தினத்தின் கருப்பொருளாக ''Ape Salli'' அல்லது எமது பணம் எனும் விடயத்தினை தேர்ந்தெடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் கருத்து தெரிவிக்கையில் ''ஊழல் ஓர் நோயாக இருப்பின் வெளிப்படைத்தன்மை அதன் மத்திய சிகிச்சைப் பகுதியாகும்'' என குறிப்பிட்டார். முன்னாள் பொதுச்செயலாளர் குறிப்பிட்டது போல் ஊழலுக்கு எதிராக இந்த வெளிப்படைத்தன்மை எனும் சிகிச்சையை ஊக்குவிப்பதற்காகவே TISL நிறுவனம் இன்று Apesalli.lk எனும் இணையத்தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஊழலுக்கெதிரான சமூக செயற்பாட்டிற்கான பொதுமக்களின் தளம்.

அந்தவகையில்

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்திடம் ஊழலுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாட்டினை மேற்கொள்ள அணீனுண்ச்டூடிடூடு எனும் இணையத்தளமானது நாட்டு மக்களுக்கு உதவுகிறது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் சரிபார்த்து உறுதி செய்ததைத் தொடர்ந்து, முறைப்பாட்டினை மேற்கொண்டவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் குறித்து TISL நிறுவனமானது ஆலோசனைகளை வழங்கும். அதேபோல் அன்றாட வாழ்வில் ஊழலுடன் தொடர்புடைய சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவ்வாறான சம்பவங்களை அவதானித்தவர்கள் தங்களது




அனுபவத்தினை இத்தளத்தினூடாக ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளவும், பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கவும் மற்றும் குறித்த சம்பவம் தொடர்பில் பொதுவில் விவாதிக்கவும் பொதுமக்களால் முடியும்.

மேலும் தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் தேர்தல் காலங்களில் பொதுச் சொத்துக்கள் தவறாக பயன்படுத்துதல் போன்ற தேர்தலுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பிலும் Apesalli.lk இணையத்தளத்தினூடாக பொதுமக்களால் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். மேலும் Apesalli.lk இணையத்தளதினூடாக நாட்டின் எந்த பகுதியில் எவ்வகையான ஊழல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது என்பதை பார்வையிடவும் ஊழல் சம்பவங்களுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்களை பெற்றுக்கொள்ளவும் இணையத்தள பாவனையாளர்களுக்கு Apesalli.lk வாய்ப்பளிக்கிறது.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊழல்கள், அதனுடன் தொடர்புடைய சம்பவங்கள் மற்றும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய ஓர் தொகுப்பாக ''Hindsight 2021'' என்ற அறிக்கையினை TISL நிறுவனம் வெளியிடுகிறது. இவ் அறிக்கையானது குறித்த ஊழல் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்துகிறது.

ஊழலுக்கெதிரானசர்வதேசதினத்தை முன்னிட்டு TISL நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான நதிஷானி பெரேரா இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், இந்த ஆண்டில் மிகவும் முக்கியமான பல விடயங்கள் நடந்துள்ளது. அதாவது இந்த ஆண்டின் தொடக்கத்தில் வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய வரி விலக்கு, அவசரமாக நிறைவேற்றப்பட்ட கொழும்பு துறைமுக நகரின் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம், சீனி இறக்குமதி மோசடி, உரக் கொள்வனவு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான பல ஊழல் மோசடிகள் இந்த ஆண்டு நடைபெற்ற சில முக்கியமான சம்பங்களாகும் என தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், எவ்வாறாயினும், முடிவுகள் எடுக்கும் போது அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் காணப்பட்டிருந்தால் இதுபோன்ற சம்பவங்கள் மற்றும் ஆரோக்கியமற்ற நடவடிக்கைகளை தடுத்திருக்கலாம் அல்லது குறைத்திருக்கலாம். பொது மற்றும் தனியார் துறைகளின் செயற்பாடுகளில் அதிக வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வது மிக முக்கியமாகும். அதுமாத்திரமின்றி, இடம்பெறுகின்ற ஊழல் தொடர்பிலான சம்பவங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் தொடர்பில் பொதுமக்களும் தெரிந்திருக்க வேண்டும். இவ்வாறு நடைபெறுமாயின், அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து பொறுப்புக்கூறலுக்கான அவசியத்தினை பொதுமக்கள் கோருவதற்கும் வழிவகுக்கும் என குறிப்பிட்டார்.

நாட்டு மக்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி முன்னேற்றகரமாக செலுத்தப்பட்டு வரும் இவ்வேளையில் பல தசாப்தங்களாக நாட்டைப் பீடித்துள்ள ஊழல் தொற்றுக்கு எதிராக நாமும் செயற்படுவோம் எனும் நிலைப்பாட்டில் ஒன்றிணைவோம். ஊழலானது நாட்டின் தேவையான அபிவிருத்திகளை தடுப்பதனால் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கச் செய்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பட்டியலில் எமது நாட்டினை தொடர்ந்தும் தேக்கி வைத்துள்ளது.

ஊழலுக்கெதிரான சர்வதேச தினத்தினை அடையாளப்படுத்தும் வகையில், எமது நாட்டில் நடைபெறும் ஊழல் சம்பவங்களுக்கு எதிராக எழுச்சி பெறுமாறு பொது, தனியார் மற்றும் சமூக அங்கத்தவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கும் அதே வேளை ஊழலுக்கு எதிரான பொதுமக்களின் செயற்பாடுகளை இலகுபடுத்தும் கருவியாக TISL நிறுவனம் Apesalli.lk எனும் இணையத்தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

# வெளிவலய சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றமானது அநீதியானது

## கல்முனை பிராந்திய கல்வியியலாளர்கள் தெரிவிப்பு

**(கல்முனை நிருபர்)**

கிழக்கு மாகாண கல்வி திணைக்களமானது ஆசிரியர் சமப்படுத்தல்-2022 என்ற பெயரில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம்-தமிழ் மொழி மூலம் (பதிலீடு)- மேலதிகம் என்ற அடிப்படையில் இம்மாதம் 06 ம் திகதி இணைய வழியாக வெளியிட்ட இடமாற்ற பட்டியலில் ஏற்கனவே வெளி வலயங்களில் சேவையாற்றிய ஆசிரியர்கள் பலரின் பெயர்கள் மீண்டும் இவ் வெளிவலய சேவை பட்டியலில் உள்வாங்கப்பட்டு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது மிகவும் அநீதியானதும் அடிப்படை உரிமையினை மீறும் செயலாகும் என கல்வியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாண கல்வி திணைக்களமானது ஆசிரியர் சமப்படுத்தல் என்ற பெயரில் மேற்கொள்ளும் இந் நடவடிக்கையானது பாராட்டப்பட வேண்டியது ஒன்றாகும். ஏனெனில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற பிரதேசங்களுக்கு ஆசிரியர்களை வழங்குவது மாகாண கல்வித் திணைக்களத்தின் பணியாகும். ஆனாலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஏற்கனவே தமது சேவை காலத்தினுள் பல வருட வெளிவலய சேவையினை பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்களின் பெயர்களும் உள்வாங்கப்பட்டுள்ளமை மிகவும் கவலையளிக்கும் விடயமாகும்.

இருந்தபோதிலும், இதுவரையில் வெளிவலய சேவையினை பூர்த்தி செய்யாத பல ஆசிரியர்களினுடைய பெயர்கள் இப்பட்டியலில் உள்வாங்கப்பட்டு இருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. ஆனாலும் தமது சேவை காலத்தினுள் இதுவரையில் வெளி வலய சேவையினை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் பலர் அதிபர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலைகளில் ஒளிந்திருப்பதனை மாகாணக் கல்வித் திணைக்களம் அறியாமல் இருப்பது வேதனைக்குரியது.

எனவே கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமானது இதுவரையில் வெளிவலய சேவையினை பூர்த்தி செய்யாத, பல வருடங்களாக ஒரே பாடசாலையில் அல்லது ஒரே வலயத்தில் தொடர்ச்சியாக எவ்வித இடமாற்றமுமின்றி கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் தரவுகளினை உடனடியாக வலயக்கல்வி அலுவலகங்களினூடாக பெற்றுக் கொள்வதுடன் இவ்வாறு மறைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றவர்களினுடைய பெயர்களை இவ்விடமாற்றப் பட்டியலில் உள்வாங்குவதன் மூலம் இவ் விடமாற்றத்தினை மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்த முடியும் என கல்வியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வடிப்படையில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு அதனடிப்படையில் இடமாற்றம் நடைபெறுகின்ற போது குறிப்பிட்ட இடமாற்றமானது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர் சமப்படுத்தல் என்ற நன்நோக்கினை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என நம்புவதாக அவர்கள் கருத்து தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் வெளிவலய சேவையினை ஏற்கனவே பூர்த்தி செய்த ஆசிரியர்களை மீண்டும் வெளிவலய சேவைக்கு அனுப்புவது அவர்களது அடிப்படை உரிமையினை மீறும் செயலாகும் என்பதுடன் அவ்வாறு இதுவரையில் வெளிவலய சேவையினை பூர்த்தி செய்யாதவர்களை பாடசாலைகளிலும் வலயங்களிலும் பாதுகாத்து வைத்திருப்பது வெளிவலய சேவையினை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு செய்கின்ற மிகப் பெரிய அநியாயமாகும் எனவும் கல்வியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எனவே ஏற்கனவே வெளிவலய சேவையினை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தினை இரத்து செய்வதுடன் இதுவரையில் வெளிவலய சேவையினை பூர்த்தி செய்யாத ஆசிரியர்களின் பெயர்கள் உள்வாங்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாகாண கல்வித் திணைக்களம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என கல்வியலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கும், கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கும் குறித்த விடயத்தினை அறிவிக்கவுள்ளதாகவும், மக்கள் பிரதிநிதிகளின் ஊடாக பாராளுமன்றத்தில் இதுதொடர்பாக உரையாற்றுவதற்குமான ஏற்பாடுகளை கிழக்கு மாகாண கல்வியலாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நாவிதன்வெளி பிரதேச அறநெறி விழாவில் பதில் அரசாங்க அதிபர் ஜேகதீசன்!



**(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நாவிதன்வெளி பிரதேசசெயலகம் இணைந்து நாடாத்தும் தெய்வீக சிறுவர் திட்டத்தின் ஊடாக பின்தங்கிய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள் வழங்கும் திட்டம் மத்தியமுகாமில் நடைபெற்றது.

அவ்விழாவில் அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதமஅதிதியாகக் கலந்துசிறப்பித்தார். பதில் அரசாங்க அதிபராக பதவியேற்றபின்னர் கலந்துகொண்ட முதலாவது விழா இதுவாகும்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தெய்வீக சிறுவர் திட்டத்தின் ஊடாக, பின்தங்கிய கிராமங்களில் இயங்கும் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டினை முன்னெடுக்கும் வகையில் கற்றல் உபகரணம் புத்தகப்பை அப்பியாசகொப்பிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுவருவது தெரிந்ததே.

அந்தவகையில், மத்தியமுகாம் - 05 ¨ரீ சித்திவிநாயகர் அறநெறிப்பாடசால நாவிதன்வெளி ¨ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதி சிவஸ்ரீஜெ.அரவிந்தன் குருக்கள் திருமுன்னிலை நாவிதன்வெளி பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன் தலைமைவகித்தார்.



பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பதில் அரசாங்கஅதிபர் வே.ஜெகதீசன் கலந்துசிறப்பித்தார்.சிறப்பு அதிதிகளாக நாவிதன்வெளி உதவிப்பிரதேசசெயலாளர் பே.பிரணவரூபன் ,அம்பாரை சிவனருள் பவுண்டேசன் செயலாளர் வே.வாமதேவன்,மற்றும் ஆலயதர்மகர்த்தாக்கள், சமூகசேவையாளர்கள், அறநெறிப்பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வு தொடர்பான ஒழுங்கமைப்பினை மாவட்டசெயலக இந்துக்கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை வெளியீடு!

**(பைஷல் இஸ்மாயில்)**

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை சிறப்பு மலர் வெளியீட்டு விழா 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 2.00 மணியளவில் கிழக்கு மாகாண முதலமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான வைத்தியர் வி.அனவரதன், வைத்தியர் (திருமதி) உ.பாலமனோகரி, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய இணைப்பாளரும் புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான (திருமதி) பாஸ்கரன் ஜெயலட்சுமி, கல்முனை பிராந்திய இணைப்பாளரும் நிந்தவூர்




மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல், திருகோணமலை பிராந்திய இணைப்பாளரும், மேற்பார்வை சமூகநல மருத்துவ வைத்தியருமான சி.சிவச்செல்வன், திருகோணமலை - கப்பல்துறை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அன்ரன் அனெஸ்றீன், அம்பாறை பிராந்திய இணைப்பாளரும், நவமேதகம மத்திய ஆயுள்வேத மருந்தகத்தின் பொறுப்பதிகாரியுமான வைத்தியர் (திருமதி) டபிள்யு.டி.நில்மனி பிரியந்திக்கா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சஞ்சிகை வெளியீட்டு உரையை கல்முனை பிராந்திய இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபிலினாலும், சஞ்சிகை நயவுரையை கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் வி.அனவரதன் ஆகியோரினால் நிகழ்த்தப்படவுள்ளது.

நாட்டின் அசாதாரன சூழ்நிலையை கருத்திற்கொண்டு கிழக்கு மாகாண ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வைத்திய பொறுப்பதிகாரிகள் மற்றும் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வழங்கிய வைத்தியர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.


நாள் தோறும்
சுபீட்சம்
மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com




Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57














# மழை நீரை சேமித்து பாவித்து வந்தோம் இப்போது மழையும் இல்லை

ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவிலும் கோறளைப்பற்று மத்தி பிரதேசசெயலாளர் பிரிவிலும் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியை அன்டியதாக உள்ள கிராமமே ஹிஜ்ரா நகர் கிராமமாகும்.

இக் கிராமத்தில் முன்நூறு குடும்பங்களை சேர்ந்த 1064 நபர்கள் வாழ்ந்து வருகின்றனர் இவர்களது பிரதான தொழில் கால்நடை வளர்ப்பு, வீட்டுத் தோட்டம் மற்றும் கூலித் தொழிலாகும்.



இப் பகுதி மக்கள் தங்களுக்கான குடி நீர் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவர்களுக்கு அரசாங்கத்தினாலும் தொண்டு நிறுவனங்களினாலும் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டிருந்தாலும் அதனுடாகவும் தங்களது தேவைக்கான நீர் இல்லாமல் மிகவும் சிரமமப்படுகின்றனர்.

இவர்களின் குடி நீர் பிரச்சினையை ஓரளவு தீர்க்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினால் வாகனத்திற்கான டீசலுக்கான கொடுப்பணவு வழங்கப்பட்டு ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆளனி மற்றும் வாகனத்தின் ஊடாக பிரதேச சபை எல்லைக்குள் உள்ள தண்ணீர் தட்டுப்பாடாக உள்ள பிரதேசங்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை குடி நீர் வழங்கப்பட்டு வருகின்றது.




நடேசன் குகதர்சன்

அவ்வாறு வழங்கப்படும் நீரும் மழை காலம் ஆரம்பித்தால் வழங்குவது நிறுத்தி விடுகின்றார்கள் கிணறு இல்லாத நாங்கள் நீர் வழங்குவதனை நிறுத்தினால் நீருக்கு என்ன செய்வது என்று பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மழை பெய்யும் போது மழை நீரை சேமித்து பாவித்து வந்தோம் இந்த வருடம் மழையும் குறைவு. அதனால் குடிப்பதற்குக்கூட நீர் இல்லாமல் நாங்கள் மிகவும் சிரமமப்படுகின்றோம் என்று தெரிவிக்கின்றனர்.

மழை பெய்ய ஆரம்பித்ததுடன் எங்களுக்கான குடி நீர் வழங்குவதனை நிறுத்தி விட்டார்கள் முறையான மழை வீழ்ச்சியும் எங்களது பகுதியில் இல்லாததால் கிணறுகளிலும் நீர் வற்றிக் காணப்படுகின்றது.

நீருக்காக நாங்கள் மிகவும் கஸ்டப்படுகின்றோம் எங்களுக்கு நீர் தொடர்ந்து கிடைப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

ஹிஜ்ராநகர் மக்களின் குடி நீர் வினியோகம் நிறுத்தப்பட்டது தொடர்பாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபரிடம் வினவியபோது.

பிரதேசசபையினால் எங்களது பிரதேச எல்லைகளில் உள்ள வறட்சியான கிராமங்களுக்கு




கோடை காலத்தில் பிரதேச செயலகத்தினால் வாகனத்திற்கான போக்குவரத்திற்காக வழங்கப்படும் டீசலுக்கான கொடுப்பணவு வழங்கப்பட்டு ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆளனி மற்றும் வாகனத்தின் ஊடாக குடி நீர் வழங்கப்பட்டு வருவது வழக்கம் தற்போது மழை பெய்ய ஆரம்பித்ததும் பிரதேச செயலகங்களினால் வழங்கப்படும் டீசலுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டதாக எங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கான குடி நீர் வழங்குவதனை நிறுத்தியுள்ளோம். இருந்தும் குறித்த பகுதிகளில் தொண்டு நிறுவனங்களுக்கூடாக சில இடங்களில் ஆழ்துளை கிணறுகளை அமைத்து வருகின்றோம்.

எதிர்காலத்தில் தேசிய நீர் வடிகாலமைப்பு சபையின் குடி நீர் திட்டமும் அப் பகுதியில் வழங்குவதற்கான நடடவடிக்கைகளை பிரதேசபை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.





# விழிநீர் சிந்தல்



அன்னை மடியில்
18.05.1952

ஆண்டவன் மடியில்
11.12.2021

## அமரர் திரு . வேலுப்பிள்ளை தவராஜா BED (Hons)

இவர் 11.12.2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் ஓய்வுநிலை சிரேஷ்ட கணிதபாட ஆசிரியர் (மட்/புனிதமிக்கேல் கல்லூரி), தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்/மாநகரசபை கௌரவ உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி மண்முனை வடக்கு பிரதேச கிளைத் தலைவரும், மட்டக்களப்பு தமிழ்ச்சங்க செயலாளரும் மற்றும் சமாதான நீதவானும் ஆவார்.

**அன்னாரின் பூதவடல் திங்கட்கிழமை 13.12.2021 பிப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கள்ளியங்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல் குடும்பத்தினர்

# அரச சேவையாளர்களின் சம்பளத்தை 18000/- ரூபாவால் அதிகரிக்க வேண்டும்

## ஒன்றிணைந்த இலங்கை அரச சேவைகள் தோழிற்சங்கக் கூட்டமைப்பு கோரிக்கை.

**(ஏ.எல்.எம்.ஷினாஸ் ,பாறுக் ஷிஹான், றாசிக் நபாயிஸ்)**



அரசு சேவையாளர்களின் மாதாந்த சம்பளத்தை 18000/- ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என ஒன்றிணைந்து இலங்கை அரச சேவையாளர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கையை முன்வைத்துள்ளது. தொழிற்சங்க கூட்டமைப்பு ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை (12.12.2021) கல்முனையில் நடைபெற்றது இங்கு கருத்து தெரிவிக்கும் போதே தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் , இலங்கை அரசாங்க பொது சேவைகள் சங்கம், வடக்கு கிழக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க , விவசாயப் போதனாசிரியர்கள் தொழிற்சங்கம் சங்கம், கிழக்கு மாகாண சமூக சேவைகள், கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம், ஆகிய தொழிற்சங்கங்கள் இதில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து தொழிற்சங்க பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கும் போது, தற்போது நாட்டில் உள்ள அனைத்து அத்தியவசிய பொருட்களின் விலைகளும் மிக அதிகளவில் உயர்ந்துள்ளன. எரிபொருள் விலை உயர்ந்து போக்குவரத்து செலவு அதிகரித்து விட்டது. கேஸ்விலை , மாவிலை , அரிசி விலை என்பன உயர்ந்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியவசிய பொருட்களின் விலைகளும் அதிகரித்துவிட்டன. அனைத்தினதும் விலைகள் உச்சத்திற்கு சென்றுள்ளன. விலையேற்றங்களை கணிப்பீடு செய்கையில் , நான்கு அல்லது ஐந்து உறுப்பினர்களை கொண்ட குடும்பம் ஒன்றின் வாழ்க்கைச் செலவு மாதமொன்றிற்கு ரூபா 25,000 / -இலும் கூடுதலாக அதிகரித்துள்ளதை கவனத்திற் கொள்ள வேண்டும். நாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடி பற்றி ஊடகங்கள் வாயிலாக நாங்கள் அறியக்கூடியதாக உள்ளது . அதேவேளை அரச சேவையாளர்கள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதென்பது , மிகவும் கஷ்டமாகவும் இடர்பாடாகவும் உள்ளது. அரசிடம் இருந்து சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு எந்த மார்க்கமும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இல்லாதிருப்பதையும் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று திடமாக நம்புகின்றோம். எனவே தயவு செய்து , அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 18,000/ - இற்கு குறையாத சம்பள அதிகரிப்பு ஒன்றினை 2022.01.01 இல் இருந்து வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கோரிக்கை முன்வைக்கின்றோம்.

குறித்த எமது கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படாத பட்சத்தில் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நாடு பூராகவும் உள்ள ஒன்றிணைந்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து பாரிய அளவிலான கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்கு நாம் பின் நிற்கப்போவதில்லை என்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் இங்கு வலியுறுத்தினார்கள்.



## நெஞ்சம் பொறுக்கவில்லையிந்த நிலையற்ற வாழ்வதனை நினைக்கையிலே...

### அமரர் வேலுப்பிள்ளை தவராஜா அவர்களுக்கான கண்ணீர் பூக்கள்

மார்கழி திங்கள்
பதினோராம் நாள்
பகலவன் எழவில்லை-என்னை
எழப்பியது அந்த துயரச் செய்தி

''தவராஜா தவறிவிட்டார்''
தட்டிப் பாடத்தேன்
உணர்வுடன்தான் உள்ளேனா? என்று
உண்மை இதுவென உணர
மனம் மறுக்கின்றது.

நேற்று எம்மை நிறைவுடனே
வரவேற்ற மனிதம் இன்று
மௌனித்ததென்ற
மாயையை என்ன சொல்ல?

நெஞ்சம் பொறுக்குதில்லையிந்த
நிலையற்ற வாழ்வதனை நினைக்கையிலே

நினைத்துப் பார்க்கின்றேன்
நிந்தன் நிஜமான வாழ்வதனை....

தூய தமிழன்,
துடிப்பான செயல் வீரன்,
எதற்குமஞ்சா துணிவாளன்,
மற்றோர் துயர் கண்டு,
துடிக்கும் மனிதனவன்,
கனிவான பண்பாளன்,
கணீர் என்ற குரலாளான்,
தமிழிலக்கிய சொத்தாளன்,
தளராத தமிழ் பற்றாளன்,
அநீதிக்கு சின்ம சொப்பனம்,
நீதிக்கு சிம்மாசனம் அவன்.

இறுக்கமான கொள்கையுடன்
இறுதிவரை தடம் புரளா தமிழன்,
தமிழை நேசித்தார், தமிழை போஷித்தார்
தழிழுக்காய் வாழ்ந்தார், தமிழாகவே வாழ்ந்தார்.

என் அரசியல் பாதைதனில்
அழிக்க முடியாத சுவடு அவர்
தேர்தல் காலமதில்
நிழலாக தொடர்ந்து நிறை பணி செய்தார்.

துட்டன் செய்த வினை
துடைத்தெறிவேன் என்றோ
தொடை தட்டி சொல்லியின்னும்
ஒரு நாளும் ஆகவில்லை.

காலன் அவன் கொடியவன்
கணப்பொழுதில் கவர்ந்து சென்றதேன்
வேலை முடித்து வைத்த
வேதனையை என் சொல்வேன்?

நெஞ்சம் பொறுக்குதில்லை இந்த
நிலையற்ற வாழ்வதனை நினைக்கையிலே

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றேன்
அன்னாரின் பிரிவால் துயருறும்
அன்னாரின் அன்பு மனையாள்
ஆசை குழந்தைகள், உற்றார் உறவினர்கள்,
நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
கனத்த இதயத்துடன்
துயர் களைய பிரார்த்திக்கின்றேன்.

**மாணிக்கம் உதயகுமார்**
**முன்னாள் அரச அதிபர்,**
**மட்டக்களப்பு**

# சர்வதேச மனித உரிமை தினத்தினை முன்னிட்டு திருகோணமலையில் வாகன பேரணி







**(சுமன்)**

சர்வதேச மனித உரிமை தினத்தினை முன்னிட்டு திருகோணமலையில் அரச சார்பற்ற அமைப்புகளின் ஏற்பாட்டில் வாகன பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை சர்வோதயம் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகம் வரை சென்று ஜனாதிபதி அவர்களுக்கான மகஜர் கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகம் ஊடாக அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கை இதன்போது முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 350க்கும் மேற்பட்ட மூவின மக்களும் இப்பேரணியில் கலந்து கொண்டு தங்களுக்கு இருக்கக் கூடிய உரிமைசார் பிரச்சினைகளை பதாதைகள் ஊடாகவும், கோசங்கள் ஊடாகவும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன் போது மூவின மக்களும் இணைந்து சமாதானம் மற்றும் நல்லிணக்கம் மலர வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தி வெள்ளைப் புறா மூலம் அதனை வெளிப்படுத்தியும் இருந்தனர்.

மேற்படி பேரணியானது திருகோணமலை சர்வோதயம் நிலாவெளி வீதி ஊடாக 03ம் கட்டை பகுதியை அடைந்து மீண்டும் கண்டி வீதிக்குச் சென்று அபயபுரம் சந்தி ஊடாக இலிங்கநகர், உவர்மலை பிரதேசத்திற்குச் சென்று இறுதியாக கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகம் முன்பாக நிறைவுற்றது.

ஆளுநர் அலுவலகம் முன்பாக சனாதிபதி அவர்களுக்கு தயாரித்து அனுப்பவிருந்த மகஜர் ஆளுனர் அவர்களின் வேண்டுதல்களுக்கும் உகரிசனைக்கும் அமைவாக கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்தின் திட்டமிடல் அதிகாரி அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

மக்கள் தங்களுக்கான உணவினைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை இல்லை, அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை அதிகரிப்பினை உடன் நிறுத்துதல், தங்களது குடியிருப்பு மற்றும் வாழ்வாதார நிலங்கள் அரசினால் அபகரிக்கப்படுகின்றமை, அடிப்படை உரிமைகளை இலங்கை அரசு உறுதிப்படுத்தல், பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகளை உடன் நிறுத்துதல், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தினையும் நல்லுறவையும் அரசு ஏற்படுத்துதல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்திய வண்ணம் இப்பேரணி இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மெழுகுவர்த்தி கொழுத்தி போராட்டம்




**(எருவில் துசி)**

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் என்பன இணைந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இ.தேவஅதிரன் அவர்களின் தலைமையில் நேற்று மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர் முதல் அமர்வாக பி.ப 02.00 மணிக்கு இணைய தொழில்சார் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் பொடிகமகே அவர்களினால் இணைய வழி ஊடகவியலாளர்கள் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள சவால்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது இதன் போது ஊடகவியலாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரட்சினைகளையும் அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேலும் நான்கு மணிக்கு மனித உரிமைகள் தொடர்பாக கிழக்கு பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் ராதா ஞானரெட்னம் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர் முகமட் இஸ்மயில் பாறுக், திருமதி கேதிஸ்வரி யோகதாஸ் மற்றும் இ.மனோகரன் ஆகிய பிரதிநிதிகள் மனித உரிமைகள் தொடர்பாக கருத்துரையாற்றினர் நிகழ்வு சிறப்படைய உதவி அனைவருக்கும் ஊடகவியலாளர் வ.சக்திவேல் அவர்களினால நன்றி கூறப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக மாலை 6.00 மணியளவில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் என மெழுகுவர்த்தி கொழுத்தி போராட்த்தில் ஈடுபட்டதுடன் நிகழ்வு நிறைவுற்றது.

# கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ணத்தை சுவீகரித்த மாவட்ட செயலக அணிக்கு அரசாங்க அதிபர் பாராட்டு!!





**(கல்லடி நிருபர்)**

அரச உத்தியோகத்தர்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச செயலகங்கள் மற்றும் அரச திணைக்களங்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ண மென்பந்து கிறிக்கட் சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட செயலக அணி வெற்றிக்கிண்ணத்தினை சுவீகரித்தமையினை முன்னிட்டு மாவட்ட செயலக அணியின் விளையாட்டு வீரர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே.கருணாகரன் அவர்களது தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த், திருமதி.நவரூபரஞ்ஜனி முகுந்தன், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அமிர்தலிங்கம் உள்ளிட்ட மாவட்ட செயலக உயரதிகாரிகளும் கலந்துகொண்டு மாவட்ட செயலக அணியினரை வாழ்த்தியதுடன் நினைவுச்சின்னம் உள்ளிட்ட சான்றிதழ்களையும் வழங்கிவைத்தனர்.

இதன்போது கடந்த 5 வருடங்களாக மாவட்ட செயலக அணி வெற்றியிட்டி மாவட்ட செயலகத்திற்கு பெருமை சேர்த்துக்கொடுத்துள்ளமையினை முன்னிட்டு மாவட்ட அரசாங்க அதிபரினால் விசேடமாக பாராட்டுக்களை தெரிவித்ததுடன், தனது வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார்.

அதே வேளை மாவட்ட செயலக அணியினர் பெற்றுக்கொண்ட கோறளைப்பற்று பிரதேச செயலாளர் வெற்றி கிண்ணத்தை மாவட்ட அரசாங்க அதிபரிடம் உத்தியோகபூர்வமாக வழங்கிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மீன் வியாபாரிகளுக்கு தராசு வழங்கி வைப்பு

**(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)**

திருகோணமலை உப்புவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மீன் வியாபாரிகளுக்கு சொந்த நிதியில் தராசுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று சாம்பல் தீவு பகுதியில் இடம் பெற்றது.

திருகோணமலை நலன்புரிச்சங்கம் கனடா என்ற அமைப்பினரிடம் கடல் அன்னை மீன் வியாபாரிகள் கூட்டுறவுச்சங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக ரகுநாதன் தங்கவடிவேல்





என்பவரின் சொந்த நிதியிலிருந்து சனிக்கிழமை (11) தராசுகள் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக மீன் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலையில் தராசுகள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டதாகவும் மீனவர்கள் மீன் விற்பனை நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்டு வந்ததாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் மீனவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் முகமாக முதற்கட்டமாக தராசுகள் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது திருகோணமலை உப்புவெளி பிரதேசத்தில் வசித்து வந்து வசித்து வரும் சமூக சேவையாளர் வெள்ளைத்தம்பி சுரேஷ் மற்றும் மீன் வியாபாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
UTHAYAKUMAR EDUCATION CENTER
உதயகுமார் கல்வி மையம்
வளர்ச்சியின் உச்ச நிலை கல்வி
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
wellness massage
www.aaranayurveda.ch
Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Frühstück / Mittagessen / Abendessen
Meier-Wiesen Str. 58
8064 Zürich
Montag - Sonntag
08:00 - 22:00
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT
Maestro

# தமிழ் எழுத்துலகின் ஜாம்பவான் கணேசலிங்கன் 93 வது வயதில் காலமானார்



இலங்கை வடபுலத்தின் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர் 9.3.1928ல் பிறந்தவர் தனது 93வது வயதில் இந்தியாவில் இறைபதமடைந்தார் என்ற துயரச் செய்தி எம்மை துயரில் ஆழ்த்தியது. உரும்பராய் செல்லைய-இராசம்மாதம்பதிகளின் இரண்டாவது மகனாகப்பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை உரும்பராய் கிறிஸ்த்தவ பாடசாலை, சந்திரோதயா வித்தியாசாலையில் பெற்றதுடன் உயர் கல்வியை யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் பயின்றார்.(இது தற்போது யாழ் பல்கலைக் கழகமாக உள்ளது)

இவர் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட நாவல்கள் நூற்றுக்கும்மேற்பட்ட கட்டுரைகள், விமர்சன நூல்கள், சிறுவர் இலக்கியங்கள், பயணக்கட்டுரைகள் என பல்வேறு நூல்களைத் தமிழ் உலகிற்குத் தந்திருக்கிறார். தன்னடக்கம், அமைதி, ஆளுமை மிக்க இவர் தமிழ்நாடு, இலங்கை முதுபெரும் எழுத்தாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழ்பணி புரிந்திருக்கிறார்.

இந்தியாவில் திரைப்படத்துறையிலும் பயிற்சி பெற்ற இவர் பாலுமகேந்திரா இயக்கத்தில் கமலஹாசன் நடித்த 'கோகிலா' என்னும் தெலுங்குப் படத்தின் தயாரிப்பு நிர்வாகியாகவும் இருந்திருக்கிறார். ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் இவரின் சிறுகதைகள், நாவல்கள் முக்கியமானவையே. இவரது நாவல்களில் 'சடங்கு' 'செவ்வானம்' 'நீண்ட பயணம்' 'மண்ணும் மக்களும்' போன்றவை முக்கியமானவை எனக் கருதப்படுகின்றன.

கொழும்பு வெள்ளவத்தையில் இவரின் புத்தகக்கடையில் அரிய பல நூல்களை அறிமுகப்படுத்தி வாசகர் வாசனையை அதிகரிக்கச் செய்து தமிழ் மக்களின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார். 1983 இனக்கரவத்தால் புத்தகக்கடை எரிந்து சாம்பலானது. பின்னர் இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து வடபழனியில் மீண்டும் ஒரு புத்தக நிலையத்தை ஆரம்பித்து ('குமரன் பதிப்பகம்')நடாத்தி வந்தார். இந்தப் புத்தக நிலையத்தால் இலங்கை, இந்தியா, புகலிட எழுத்தாளர்களின் படைப்புகளை வெளிக்கொண்டு வந்து தமிழ் வளர்ச்சிக்கு உழைத்தார்.

**மண் சஞ்சிகையோடு இவர்...**

இலங்கையில் பல மாவட்டங்களில் அரசாங்க அதிபராக இருந்து ஓய்வு பெற்று லண்டனில் வசித்து வந்தபோது சென்றவருடம் காலமான எனது அன்புக்குரியவரும் தமிழ்பற்றாளரும் நாட்டுப்பற்றாளருமான அமரர் மார்க்கண்டு ஐயா அவர்கள் என்னை அவருக்கு 2000ம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தி வைத்ததை நன்றியோடு நினைவு கூறுகின்றேன். அமரர் கணேசலிங்கனை நான் ஒரு நாளும் இந்தியாவிலோ அல்லது இலங்கையிலோ சந்திக்கவில்லை. ஆனால் தொலைபேசி நட்டுபுத்தான். தொடர்நத்து. ஆதலால் அவருடன் எனது நட்பு நீண்டுவிட்டது. மண் சஞ்சிகையைப் பல வருடங்களாக அவருக்கு அனுப்பி வந்தபடியால் அவர் ஒரு வாசகராகவும் இருந்துள்ளார்.

2001ம் ஆண்டு யேர்மனியில் நான் 'கல்லறைப் பூக்கள்' என்னும் ஒரு சிறுகதைப் புத்தகத்தை எழுதி வெளியிட்டேன். அப்புத்தகத்தை மிகக்குறைந்த செலவில் தனது பதிப்பகத்தில் அச்சுப்பதிவு செய்து தந்ததுடன்அச் சிறுகதைத் தொகுப்புக்கு முகவுரையையும் எழுதிச் சிறப்பித்திருந்தார் என்பதை இவ்வேளையில் நினைவுகொள்ளும் போது அந்த முகமறியாத மகானுக்கு எனது அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையிலும் இந்தியாவிலும் பல கல்வியாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வேந்தர்கள், அரசியல்வாதிகள், விமர்சகர்கள், எழுத்துலக ஆளுமைகள் என பலரின் நன்மதிப்பைப் பெற்ற இவர் பொதுவுடமை, பெண்ணியம், சமூகமுரண்பாடுகள், சமூக முன்னேற்றம் எனப்பல கோணங்களில் எழுதிய ஜாம்பவானின் மறைவு தமிழுலகத்துக்கு ஈடு செய்யமுடியாத இழப்பாகவே கருதலாம். சகல குணாம்சம் கொண்ட எழுத்தாளர்களோடு நட்புறவைப் பேணிவந்த இந்த இலக்கிய ஆளுமை 4.12.2021 அன்று நம்மைவிட்டுப் பிரிந்த செய்தியானது பேரிழப்பானது தமிழ் உலகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகவே கருதலாம்!.. அன்னாரின்ஆத்மா சாந்தியடைய எழுத்துலகப் பெருமக்களோடு நாமும் அஞ்சலிக்கின்றோம்!..

தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவானும் மூத்த பத்திரிகையாருமான ம.வ. கானமயில்நாதன் அவர்கள் தனது %9 வயதில் 22.11.2021 அன்று யாழ்ப்பாணத்தில் காமானார். 1942ம: ஆண்டு வட்டுக்கோட்டையில் பிறந்து வளர்ந்து கல்வி கற்றவர். மும்மொழிப் புலமையும் ஊடக ஆளுமையும் கொண்டு 1960ம் ஆண்டளவில் 'ஈழநாடு'பத்திரிகைத்துறையில் காலடி வைத்தார்.

படிப்படியாக உயர்ந்து கொழும்பு 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளில் 1960 - 1983 வரை கடமையாற்றினார். 1983 இனக்கலவரத்தின் காரணமாக கொழும்பு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து 1984ம் ஆண்டு 'வீரகேசரி' பத்திரிகையின் யாழ்ப்பிராந்திய பொறுப்பாளராகக் கடமைபுரிந்தார்.

1985ம் ஆண்டு யாழ் 'உதயன்' 'ஞ்சீவி' பத்திரிகைகளின் ஸ்தாபக பிரதம ஆசிரியராகக் கடமை புரிந்தார். சுமார் 28 ஆண்டுகள் இப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்து பல ஊடகவியலாளர்களை உருவாக்கினார். இதனால் தமிழ் ஊடக வளர்ச்சி பெருமிதம் கண்டது.

பழகுவதற்கு இனிமையானவர், கடமை உணர்வு கொண்டவர். நாடு, மொழி, மதப்பற்றி நிறைந்திருந்ததுடன் தமிழ் இன விடுதலைக்கு ஒரு ஊடகப்போராளியாகவே செயற்பட்டுவந்திருக்கிறார். யுத்தகாலத்திலும் அரச பயங்கரவாத காலத்திலும் தமிழ் மக்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பத்திரிகை ஊடகம் வாயிலாகப் பெரும் பங்கு வகித்தார். இப்படிப்பட்ட முதுபெரும் ஊடகவியலாளனுக்கு எத்தனையோ அச்சுறுத்தல்கள் நெருங்கினாலும் அவறஇறை எல்லாம் எதிர்கொண்டார். ஈழவிடுதலைப் போராட்ட காலத்தில் சத்தமற்ற ஊடக சாட்சியங்களில் ஒருவராகப் பயணித்திருக்கிறார். கொலையாளிகளின் கீழ் நின்று ஊடகப்பணியாற்றிய துணிச்சல் மிக்க பேனாப் போராளியாகவே இவரை மக்கள் இனங்கண்டனர்.




நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்களை உருவாக்குவதில் பெரு வெற்றி கண்டிருக்கிறார். அவர் வழிவந்த பல ஊடகவியலாளர்கள் இன்று ஜாம்பவான்களாகத் திகழ்கின்றார்கள் என்றால் இது அவருக்கே பெருமையான விடையமாகும்.

பின்னர் உடல்நிலை சிறிது தளர நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்காக சுவீஸ்லாந்து நாட்டுக்கு வந்து 2013 - 2015 வரை வசித்துவிட்டு, மீண்டும் தாயகம் திரும்பினார். ஆயுதம் என்னும் பேனாவை எடுத்த கை ஓயுமா?..; 2016 யாழ்ப்பாணத்தில் 'காலைக்கதிர்' பத்திரிகை முதன் முதலாக வெளிவர அதன் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்துவிட்டு வயது மூப்பின் காரணமாக 2018ம் ஆண்டு ஓய்வு பெற்றுக் கொண்டார்.

பத்திரிகைத் துறையின் ஜாப்பவான், ஆளுமைமிக்க ஊடகவியலாளரான இவர் பல்துறை ஆற்றல் மிக்கவராவர். தமிழ், சமயம், சமூகம் தொடக்கம் அரசியல் வரை ஆசிரியர் தலையங்கள் எழுதிய போது யாருக்கும் அஞ்சாமல் தலைகுனியாமால் ஆணித்தரமான கருத்துக்களை எழுதி மக்கள் மனங்களை வென்றார்.

சுமார் அறுபது ஆண்டுகள் ஊடகப்பணி புரிந்த இவருக்கு சர்வதேச எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பானது 2013ல் பிரான்ஸ்; நாட்டுக்கு அழைத்து 'ஊடக விசேட விருது'வழங்கிக் கௌரவித்திருக்கிறது. யாழ் ஊடக மையம் 2018ல் ஊடகவிருது வழங்கிக் கௌரவித்தது. இவற்றைவிட தமிழ்ப்பகுதிகளிலும் கொழும்பிலும் பல விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

தமிழ்ப்பத்திரிகை ஊடக உலகில் மணிவிழா கண்ட மூத்த பத்திரிகையாளரான இவரின் இழப்பானது மாபெரும் இழப்பாகவே தமிழ் உலகம் கருதுகின்றது. பேனாப் போராளியா உருவெடுத்து தமிழ்மக்களின் இதங்களை வென்று பெரும் பணியாற்றிய இந்தப் பெருந்தகைக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவிக்கும் வேளை அன்னாரின் குடும்பத்தவகளுக்கு ஆறுதலைத் தெரிவிக்கின்றோம்!..

உண்மையான, நேர்மையான பேனாப்போராளிகளும் நம் சமூகத்தின் தூண்கள் என்றே அழைக்கலாம். அவர் நாமம் நின்று நிலைக்க அவரின் ஊடகப்பணி;க்கு நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்!..

**பிரதம ஆசிரியர்**
**"மண்" சஞ்சிகை -**
**யேர்மனி - 10-12-2021**

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 10

# சிற்ப செதுக்கல் துறையின் மூத்த கலைஞர்; சபாபதி சிவசோதிலிங்கம் கலைஞரின் சாதனைப் பயணம்

**ஆயகலைகளை நம் முன்னோர் அறுபத்துநான்கு என வகைப்படுத்தியுள்ளனர். அவைகளில் சில கலைகள் காலத்தின் போக்கில் அழிந்து விட்டன. அவற்றில் நிலை பெற்ற கலைகளாகவும், உலகம் எங்கும் வாழும் கலைகளாக சிலவற்றை அறிஞர்கள் வகுத்துள்ளனர். அவற்றில் சிற்பக்கலை மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. தற்போது நாடெங்கிலும் பல்லாயிரக்கணக்கிலான திருக்கோயில் கட்டடங்களையும், எண்ணற்ற சிற்பங்களையும் நாம் காணலாம். இவை எல்லாம் நமது தமிழ்ச்சமுதாயத்தின் பண்பாட்டு சிறப்புக்களையும், கலைநுட்பங்களையும் புலனாக்குகின்றன. நமது நாட்டுச்சிற்பங்கள் வெறும் கலைப்படைப்புகளோ, காட்சிப் பொருள்களோ அல்ல. கண்ணால் காண முடியாத ஒரு பொருளை அறிவால் உணர்ந்து அவ் உணர்வினைக் கலை வடிவாய் நம் கண் முன் கொண்டு வருவது நம் நாட்டுச்சிற்பக்கலையின் சிறப்பியல்பாகும். இத்தகைய அரிய கலைச்செல்வங்களை படைப்பவர்கள் இந்தத்தமிழ் மண்ணிலே தோன்றி மதிநுட்பமும், செயலாற்றும் திறனும் வாய்க்கப்பெற்ற சிற்பக்கலைஞர்களே ஆவர். அந்த வகையில், திருக்கோணமலை சேனையூரில் 1961 இல் பிறந்த சபாபதி சிவசோதிலிங்கம் தனது 19 ஆவது வயதிலிருந்து தற்போது வரை சிற்பக்கலைத்துறையில் ஈடுபட்டு வருகின்றார். இக் கலைஞர் பஞ்சலோகங்களை முதன்மைப்பொருளாகக் கொண்டு பல்வேறு வகையிலான உருவச்சிலைகளை வார்த்தெடுத்து வருகின்றார். தற்போது இக் கலைத்துறையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் புகழ்பூத்து விளங்குகின்றார். தனது கலைத்துறையின் மூலமாக நம் மண்ணுக்கு பெருமை சேர்த்த இக்கலைஞரை சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை என்ற பகுதிக்காக அவரது இல்லத்தில் சந்தித்த தருணத்தில் அவர் எம்முடன் பகிர்ந்து கொண்ட செவ்விகாணலின் தொகுப்பினை இங்கு காணலாம்.**









இத்துறை இவரது பரம்பரைத் தொழில். இவரது தந்தையார் சபாபதி இத் தொழில் ஈடுபடும் பொழுது, அவருடன் இணைந்து சிறு உதவிகளை செய்து கொடுப்பார். அந்த சிறு வயதில் ஏற்பட்ட ஆர்வம் இவரது தந்தையாரை மானசீக குருவாக ஏற்று ஆகம விதிகளுக்கு அமைய முறைப்படி முழுமையாக கற்றுக் கொண்டார். தற்பொழுது 41 வருடங்களாக இத்துறையில் ஈடுபட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது பரம்பரைத்தொழிலான இத்துறையில் ஆரம்பகாலக் கட்டத்தில் குறைந்தளவிலான வருமானமே கிடைக்கப்பெற்றது. ஆனால் தற்போதைய காலத்தில் புதிதாக ஆலயங்கள் கட்டப்படுவதாலும், சில ஆலயங்கள் புனரமைக்கப்படுவதாலும் சிற்பங்களின் தேவைப்பாடு அதிகரித்த நிலையிலே உள்ளது. இத்தேவையானது நமது நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தற்பொழுது வருமானம் போதிய அளவு கிடைக்கின்றதாகவும், பல்லாயிரக்கணக்கில் சம்பாதிக்க முடிகின்றதாகவும் குறிப்பிட்டார்.

ஒரு சிற்பத்தை உருவாக்குவதற்கான செயன்முறையாக, பஞ்சலோகங்களான செம்பு, பித்தளை, ஈயம், வெள்ளி, தங்கம் என்பனவே சிற்பத்துக்குத் தேவையான மூலப்பொருட்கள் ஆகும். இவ் அனைத்துப் பொருட்களும் கொழும்பு பிரதேசத்தில் இருந்தே வரவழைக்கப்படுகின்றன. இவ் மூலப்பொருட்களைக் கொண்டு மெழுகுபிடித்தல், கருக்கட்டுதல், வார்த்தல், வெட்டிராவிச்சீவுதல், தீர்மானம்செய்தல் என்ற ஐந்து வகையான செயன்முறையினூடாக சிற்பம் உருவாக்கப்படுகிறது. இதனை சுருக்கமான முறையில் குறிப்பிட்டால், முதலாவதாக, குங்கிலியக் கலவையுடன் கடலை எண்ணெயும் சேர்த்து சீராகத் தீ வளர்த்து உருக்கி பக்குவமடைந்த நிலையில் தேன் மெழுகைச் சேர்த்து உருக்குதல் வேண்டும். இச் செயன்முறை மெழுகுபிடித்தல் எனப்படும். இரண்டாவதாக, இவ்வாறு உருவாக்கிய மெழுகுப்படிமத்தை பல வகையான மண்பூச்சுக்களால் மூடி உலர்த்தி அதனை தீயிலிட்டு சுட்டு அதற்குள் அமைந்த மெழுகுப்படிமத்தை உருக்கி வெளியேற்றிய பின் மண் கூட்டுக்கரு உருவாகும். இச் செயன்முறை கருக்கட்டுதல் எனப்படும். மூன்றாவதாக, இங்ஙனம் தயாரித்த மண்கூட்டுக் கருவுக்குள் உலோகத்தை உருக்கி ஊற்றி படிமத்தை வடித்திட வேண்டும். இச் செயன்முறை வார்த்தல் எனப்படும். நான்காவதாக, இவ்வாறு வார்க்கப்பட்ட படிமத்தை கருவிகளைக் கொண்டு அதன் உடலமைப்புக்கேற்ப சரியான அளவு முறையில் நுணுக்கமாக வெட்டுதல் வேண்டும். இச் செயன்முறை வெட்டிராவிச் சீவுதல் எனப்படும். ஐந்தாவதாக, இவ் வெட்டிய படிமத்தின் அளவுப்பிரமாணங்களை அவதானித்து விட்டு வண்ணங்கள் தீட்ட வேண்டுமாயின் தீட்டீ கண்களைத் திறக்கும் நற்பணியை மேற்கொண்டு சிற்பம் முழுமை நிலையை அடைந்து ஜீவனுள்ள வடிவமாக உருப்பெறும். இதுவே சிற்பத்தை செதுக்குவதற்கான செயன்முறையாகும் எனக் குறிப்பிட்டார்.

தெய்வீகக் கலையான இக்கலையை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் எண்ணம் நிறையவே உள்ளதாகவும், ஆனால் அதற்கானவர்கள் இன்னும் கிடைக்கவில்லையாகவும், காரணம் இக்கலைத்துறைக்கான அடிப்படைப் பண்பு பொறுமையேயாகும். பல மணித்தியாலங்கள் ஒரே இடத்தில் அமர்ந்த வண்ணம் சிற்பத்தை செதுக்க வேண்டும். இவ் அடிப்படை பண்பினைக் கொண்டவர்கள் இன்னும் தன்னிடம் கிடைக்கவில்லையென்றும் அவ்வாறானவர்கள் கிடைக்கப்பெற்றால் நிச்சயமாக கற்பித்துக் கொடுப்பார் எனவும் இக் கலைஞர் குறிப்பிட்டார். இவரது மனைவியின் பெயர் திருமதி. சாரதாதேவி சிவசோதிலிங்கம். இவருக்கு 2மகள்களும், 2மகன்களும் உள்ளனர். இவருக்குப் பின் இக்கலைத்துறையில் ஆர்வத்துடன் இவரின் மகனான யதுர்சனன் ஈடுபட்டு வருகின்றார். இவரின் மூலமாகவும் சிற்பங்கள் வார்த்தெடுக்கப்பட்டு வருகின்றன. இச் சிற்பத்துறையில் இவரது மகனின் மேம்பட்ட திறமையின் மூலமாக அவர் அடைய வேண்டிய அங்கீகாரத்தை அடைவதோடு மட்டுமல்லாமல் இத்துறையில் இவர் மகன் மென் மேலும் வளர்ச்சியடைவதற்கான ஊன்றுகோலாகவும், வழிகாட்டியாகவும் தான் இருப்பதாகவும், அவரின் மூலமாக இத்துறையில் கலைஞர்களை உருவாக்கி நம் மண்ணைப் பெருமைப்படுத்துவதற்கான திடசங்கற்பம் தனக்கு இருப்பதாகவும் இக் கலைஞர் குறிப்பிட்டார்.



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

இவர் இதுவரையில், 1500ற்கும் மேற்பட்ட சிற்பங்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உருவாக்கியுள்ளார். அவற்றில் வெள்ளவத்தை மயூராபதி ஆலயத்தின் பெரிய அம்பாள் சிலை இவரது திறமைக்கு சவாலாக அமைந்தது எனக் குறிப்பிட்டுக் கூறினார். இவ் சிற்பத்தினை முழுமையாக செய்து முடிப்பதற்கு மிகுந்த சிரமநிலைக்கு முகங்கொடுக்க நேரிட்டதாகவும், காரணம் இச்சிலையானது 5அடி 4அங்குலம் கொண்ட உயரத்தையும், 1050கிலோகிராம் எடையையும் கொண்டதனால் இதனை அச்சிலிட்டு வடிவமைத்து இறுதியாக வார்த்தெடுக்கும் வரையில்; மிகுந்த சிரமம் ஏற்பட்டதாகவும், இவ்வாறான உயரத்தினையுடைய சிலை வார்த்தது முதல் தடவையாகவும் எனக் கூறியதோடு பல போட்டிகளுக்கு மத்தியில் இவரது திறமைக்கு கிடைத்த சவாலாகக் கருதி நேர்த்தியாகவும், செம்மையாகவும் அச்சிலையை வார்த்துக் கொடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

இச்சிலையினை வார்த்த அனுபவத்தினைக் கொண்டு மேலும் திறமைக்கு சவாலாக செயற்



படுவதற்கான சந்தர்ப்பமாக இவர் தற்சமையம் கொழும்பு பிரதேத்தைச் சேர்ந்த அன்பருக்காக 5அடி 8அங்குலம் உடைய 12கைகளைக் கொண்ட மாகாளியம்மன் சிலையினை வார்த்தெடுக்கும் பணியிலும், நவாலியூர் சிவன் கோவிலுக்காக 2½ அடி உயரத்தினை கொண்ட சோமஸ்கந்த மூர்த்தம் மற்றும் கோண்டாவிலுள்ள கோவில் ஒன்றிற்காக ஞானவைரவர், சாமுண்டீஸ்வரி சிலைகளையும் வார்த்தெடுப்பதற்கான பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். மேலும் சிலைகளின் அளவு நிர்மாணங்களின் வேலைப்பாடுகளைப் பொறுத்து இவரது இல்லத்திற்கு பக்கத்திலுள்ள அவரது தொழில் பட்டறையிலும், இலுப்பங்குளம் இடத்திலுள்ள தொழில் பட்டறையிலும் வார்த்து வருவதாக குறிப்பிட்டார்.

ஆயகலைகள் 64இல் ஒன்றாக விளங்கும் இவ் தெய்வீகக்கலையை பற்றி இவர், ஒரு சிற்பக் கலைஞனானவன் அறவுணர்வு மிக்கவனாகவும், இரக்க குணமுடையவனாகவும், பேராசை அற்றவனாகவும், உண்மை பேசுபவனாகவும், ஐம்புலன்களை வென்றவனாகவும் இருக்க வேண்டும். அந்த

மிகுதி 13 ஆம் பக்கம் பார்க்க...

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 10

# சிற்ப செதுக்கல் துறையின் மூத்த கலைஞர்; சபாபதி சிவசோதிலிங்கம் கலைஞரின் சாதனைப் பயணம்



வகையில் இத்துறையில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட நாள் முதல் தற்போது வரையில் மாமிசவகை உணவுகளை உண்பதில்லை. மேலும் மது அருந்துதல், புகைப்பிடித்தல், வெற்றிலைப்போடுதல் போன்ற எந்தவொரு தீயப்பழக்கமும் இல்லை. எனது உடலிலும், மனதிலும் உறுதி உள்ளவரை எனது இக்கலைத்துறையை தொடர்ந்து செய்வேன். இதன் மூலம் மனத் திருப்தியும், இறைவனின் பூரண அருளும் கிடைக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆன்மாத் தூய்மையுடைய ஒரு சிற்பக்கலைஞனால் உருவாக்கப்படும் கடவுட் படிமங்களில் இறைத்தன்மை தோன்றி வழிபடுவோருக்கு நன்மை கிடைக்கும் என்பது இவரது நம்பிக்கையாகும் எனக் குறிப்பிட்டார்.

சிற்பத்துறையில் இவருக்கு கௌரவங்கள், விருதுகள், பாராட்டுக்கள் என்பன கிடைத்துள்ளன. 1996இல் திருக்கோணமலை ஆலடி விநாயகர் தேவஸ்தானத்தால் ஸ்தபதி சிற்பக் கலையரசு எனும் பட்டம், 2000ஆம் ஆண்டு நல்லூர் அரசடி செல்லப் பிள்ளையார் ஆலயத்தினால் பதக்கம் அணிவித்தமை. திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேக வைபவத்தின் போது நூதன விக்கிரகங்கள், கலசங்கள் நிர்மாணித்தமையை பாராட்டி ஆதின கர்த்தாவால் உலோக வித்தியா கலாயோதி பட்டமளித்து கௌரவ விருது, 2010இல் மஹா ஸ்ரீ வித்யா சர்வதேச இந்துமத பீடத்தினால் இவரது சிற்ப கலைத் துறையின் சிறப்பான பணியினைப் பாராட்டி பாராட்டுப்பத்திரம், மட்டகளப்பு காட்டுமாஞ்சோலை பேரருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ்தானத்தினால் கௌரவித்து பாராட்டுப்பத்திரம், முள்ளியவளை ஸ்ரீ சாயி ஆஸ்சிரமத்தினால் விஸ்வசிவஸ்ரீ எனும் பட்டம,; நகர முதல்வர் விருது, 2014 இல் சிற்பத்துறைப் பிரிவில் சிற்ப வித்தகர் விருதும் கிடைத்துள்ளன. 2017இல் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானகும்பாபிஷேகத்தின் போது ஆதின கர்த்தாவால் சிற்பகலா விநோதன் எனும் கௌரவ




விருது வழங்கப்பட்டமை. தேசிய அருங்கலைகள் பேரவை ஏற்பாடு செய்திருந்த ஜனாதிபதி விருதுகளுக்கான கைவினைப் போட்டி மற்றும் கண்காட்சி சில்ப அபிமாணி-2018 இல்[shilpa abhimani-2018] கைவினைப் போட்டிப் பிரிவின் கல்சிற்பத் துறையில் தகுதிச் சான்றிதழும், உலோக வார்ப்பு துறையில் தகுதிச் சான்றிதழையும் பெற்றுள்ளார். 2019இல், அருள்மிகு வவுனியா கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபையினால் முருகப் பெருமானுக்குரிய எண்கோண பூசாந்தர முகபத்திர சித்திரத் தேருக்கு கலசம் செய்தமையை கௌரவித்து நினைவுச்சின்னம் வழங்கப்பட்டமை. கிழக்கு மாகாண கிராமிய தொழில்துறை திணைக்களம் மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை ஏற்பாடு செய்திருந்த, மட்டகளப்பில் நடைபெற்ற கிழக்கு தொழில்துறை மற்றும் கைவினை கண்காட்சி-2019இல் கல்சிற்பத்துறைப் போட்டிப் பிரிவில் திருக்கோணமலை மாவட்டத்தின் மாகாண மட்டத்தில் 2ம்,3ம் இடத்தினையும், மற்றும் தகுதிச் சான்றிதழையும் பெற்றுள்ளதோடு, உலோக செதுக்கல் துறை போட்டிப் பிரிவில் மாகாண மட்டத்திலான 1ம்,2ம்,3ம் இடத்தினையும் மற்றும் தேசிய மட்டத்திலான தகுதிச் சான்றிதழையும் பெற்றுள்ளார். மேலும் கல் செதுக்கல் துறை போட்டிப் பிரிவில் தேசிய மட்டத்திலான தகுதிச் சான்றிதழையும், உலோக வார்ப்பு போட்டிப் பிரிவில் மாகாண மட்டத்திலான 1ம்,2ம்,3ம் இடத்தினையும், மாகாண மட்டத்திலான தகுதிச் சான்றிதழையும் பெற்றுள்ளார். அத்துடன் இவ் போட்டிப் பிரிவில் கைவினைத்துறைப் போட்டிப் பிரிவின் மாகாண மட்டத்திலான ஒட்டுமொத்த சிறந்த செயல்திறனாளர் விருதினையும் இவர் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவை தவிர பல வகைப்பட்ட நம்நாட்டுக் கோயில்களினாலும், அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா போன்ற வெளிநாட்டு கோயிலமைப்புக்களினாலும் பாராட்டுக்கடிதங்களும், கௌரவங்களும் கிடைத்துள்ளன என்பன மிகையாகாது.



கலைத்துறையில் ஏற்பட வேண்டிய மாற்றங்களாக இக் கலைஞர், தமிழர்கள் கலையுணர்வில் எவருக்கும் பின் தங்காதவர்கள். தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் கோயில்களின் பெருக்கமும், அங்கெல்லாம் காணப்பெறும் சிற்பவளங்களும் சிற்பக்கலைஞர்களின் கலைப்படைப்பினை எடுத்தியம்புகின்றன. சிற்பக்கலையானது தொன்று தொட்டு தந்தை மகனுக்கும், பின்னவன் தன் மகனுக்குமாக பரம்பரை பரம்பரையாகவே இத் தொழில் ஈடுபட்டு வருகின்றோம். இதுவே நம் நாட்டின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படும் போக்காகும். இதனால் இக் கலைத்துறை எங்களுடனே அழிந்துபோகும் சாத்தியப்பாடு உள்ளது. மற்றும் ஆரம்பகால கட்டங்களிலும் பார்க்க தற்காலத்தின் போக்கில் இக்கலைத்துறை மூலம் திருப்தியான வருமானமும், கௌரவங்களும் கிடைக்கின்றன. ஆனால் இத் தொழிலை பழகுவதற்கு ஆர்வம் காட்டுபவர்கள் மிகக் குறைவான நிலையிலே உள்ளனர். அவ் குறைவான ஆர்வ நிலையில் உள்ளவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் அவர்களும் சிற்பக் கலைஞர்களாக திகழ்வதற்கு இடமுண்டு. இம்மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இக்கலைக்குரிய கலைஞர்களும், இது சம்மந்தப்பட்ட பொறுப்பாளர்களும் முன் வர வேண்டும். நமது நாட்டில் தற்போது முன்னேறி வரும் சிற்பக் கலையின் மகத்துவத்தை மக்களுக்கும் வேற்று நாடுகளும் அறியும் வண்ணம் பல வகையான செயற்பாடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறந்த சிற்பக்கலைஞர்களை வெளிக்கொண்டு வந்து அவர்களின் படைப்பாற்றலுக்கிணங்க வருடத்திற்கு ஒருமுறையேனும் விருது வழங்கி கௌரவிக்க வேண்டும். இது சிற்பக்கலைத் துறைக்கு மட்டுமன்றி ஏனைய வளர்ந்து வரும் கலைகளுக்கும் கிடைத்தல் வேண்டும். இதற்கு வெகுஜன ஊடகங்களும் கைகொடுக்க வேண்டும். இதனை பொறுப்பெடுத்து நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் எமது நாடு சிற்பக்கலைத்துறையிலும், ஏனைய கலைத்துறையிலும் புகழ்பூத்து விளங்கும் முதன்மை நாடாக விளங்கும். இதன்மூலம் வெளிநாடுகளின் பார்வை எம் நாட்டின் மீது வந்து குவியும். இம்மாற்றம் ஏற்படும் பட்சத்தில் எமக்குப்பின் இக்கலையை தொடருவதற்கு எதிர்கால சந்ததியினர் முன்வருவர் எனக் குறிப்பிட்டதோடு எம் போன்ற திருக்கோணமலையின் கலைஞர்களை இப் பகுதியினூடாக அறிமுகப்படுத்திவரும் சுபீட்சம் பத்திரிகைக்கு மனதார நன்றியினைத் தெரிவிப்பதோடு, விரைவில் எம் கைகளிலும் செய்தித்தாள் வடிவில் பத்திரிகை கிடைக்கப் பெறுவதற்கான பாதையினைப் பெற வேண்டுமென வாழ்த்துவதாக இக் கலைஞர் குறிப்பிட்டார்.

**இவ்வாறாக ஆயிரக்கணக்கிற்கு மேற்பட்ட சிற்பங்களை தனது திறமையால் உருவாக்கி சிற்ப செதுக்கல் துறையில் தனக்கென்ற ஒரு அடையாளத்தை வகுத்து உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் புகழ்பூத்து நம் திருக்கோணமலை மண்ணுக்கு பெருமையை தேடித் தந்த இக் கலைஞர் அவரது துறையில் மென்மேலும் பணியாற்றி பல விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற வேண்டுமென வாழ்த்துவதோடு இக் கலைப்பணி தொடர வாழ்த்துவோம்.**

**தொடரும் கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**








# பூஸ்டர் பைசர் தடுப்பூசி வழங்கல்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகுட்பட்ட 30 வயதுக்கும் மேற்பட்டவர் களுக்கு மூன்றாவது பூஸ்டராக பைசர் தடுப்பூசி (11)வழங்கப்பட்டன. கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.றிஸ்வி தலைமையில் இத் தடுப்பு மருந்து ஏற்றும் பணி இடம் பெற்றது. கொரோனாவை ஒழிக்கும் முகமாக அரசாங்கத்தின் இவ் இலவச தடுப்பூசி ஏற்றும் பணி இடம் பெறுகின்றது. முன்னர் இரு டோஸ்கள் சைனோபாம் பெற்றவர்களே தற்போது பைசர் தடுப்பு மருந்தினை பெற்று வருகின்றார்கள். கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்,கிண்ணியா அல் அக்சா கல்லூரி, ஆலங்கேணி



வைத்தியசாலை ஆகிய இடங்களில் இத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம் பெற்றன.
மக்கள் ஆர்வத்துடன் தடுப்பூசியினை பெற்றுச் செல்வதனை அவதானிக்க முடிகிறது.

# கிழக்கு மாகாண தமிழ் பேசும் எழுத்தாளர்களின் தேசிய ஒன்று கூடல் நிகழ்வு





(பொலிவேரியன் நிருபர் - எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிழக்கு மாகாண தமிழ் பேசும் எழுத்தாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு 'கலையால் ஒன்றுபட்டு உயர்வு பெறுவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓந்தாச்சி மடம் பிரதேசத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாணத்திலுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களோடு, பிரதேச கலாசார உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக்கின் சிறப்பான ஒருங்கிணைப்பில், பிரதேச கலாசார உத்தியோகத்தர்களின் சிபாரிசில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களில் இருந்தும் மட்டுப்படுத்தப்பட்டு, 46 எழுத்தாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் 43 பேர் கலந்து கொண்டனர். ஏனைய மாவட்டங்களான மட்டக்களப்பு, திருகோணமலையில் இருந்து 60க்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

எழுத்தாளர்கள் தங்களுக்கு மேலதிகமாக உள்ள திறமைகளை நிகழ்வில் பாடல், ஆடல், கவிதை, நகைச்சுவை என வெளிக்காட்டியதோடு, எழுத்தின் மூலமாக இனங்காணப்பட்ட எழுத்தாளர்களை ஓரிடத்தில் அழைத்து அவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி, முகம் அறியச் செய்து, அலவலாவிக் கொண்ட ஓர் ஒன்றுகூடல் நிகழ்வாகவும் இந்நிகழ்வு அமையப்பெற்றதுடன் காலை முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு, காலை நேரச் சாப்பாடு, இடைச்சாப்பாடு மற்றும் பகல் போசன விருந்து, மாலை நேரச் சிற்றுண்டி என சிறப்பானதொரு ஒழுங்கின் அடிப்படையில் முன்னெடுத்திருந்த மாகாணப் பணிப்பாளருக்கு எழுத்தாளர்கள் தங்களது நன்றியைத் தெரிவித்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட எழுத்தாளர்கள் அனைவரும் வட்ஸ்அப் குழுமம் மூலமாக ஒன்றுபடுத்தப்படுத்தி, அவர்களது அனைத்து செயற்பாடுகளும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என மாகாணப் பணிப்பாளர் எஸ்.நவநீதன் இதன் போது தெரிவித்தார்.

# அ.இ.மு.லீக் பாராட்டு நிகழ்வும் நாட்காட்டி வெளியீடும்

(றியாஸ் இஸ்மாயில்,அஹமட் ஸிறாஜ்)









அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 2022ம் ஆண்டுக்கான புதிய சீருடை,நாட்குறிப்பேடு மற்றும் நாட்காட்டி வெளியீடும் நிகழ்வும் புதிய நிருவாகசபைத் தெரிவும்,பாராட்டும் நிகழ்வும் சனிக்கிழமை சம்மேளனத்தின் அக்கரைப்பற்று மாவட்டக் காரியலாயத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் தலைவரும்,ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தருமான எம்.எம். அஜ்வத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசியத் தலைவரும்,தற்போதைய நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.ஐ.உதுமாலெப்பை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய தலைவர் எம்.ஐ.றியாஸ்,செயலாளர் எம்.ஐ.சிறாஜுதீன்,பொருளாளர் கே.எல்.சுபையிர்,ஊடகப்பணிப்பாளராக ஐ.அஹமட் ஸிறாஜ் உட்பட 26 பேர் பதவி வழி உத்தியோகத்தர்கள் இதன்போது அறிவிக்கப்பட்டு சபையில் அனுமதி பெறப்பட்டதுடன் போசகராக தொடர்ந்தும் நீதிபதி அல்-ஹாமிழ் என்.எம்.அப்துல்லா செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இறையடி எய்திய அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் பெண்கள் பிரிவிற்கான மாவட்ட ஆலோசகரும்,ஓய்வு பெற்ற ஆசிரியையுமான மர்ஹூம் றசீனா உம்மா உதுமாலெப்பைக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனம் வேண்டி விசேடதுஆப்பிரார்த்தனையை கிழக்கு இலங்கை அரபுக் கல்லூரியின் பொதுச் செயலாளர் மௌலவி யூ.எம்.நியாஸியினால் நிகழ்த்தப்பட்டது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் குடும்ப உறுப்பினர்களில் இருந்து 2020ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இதன்போது பதக்கம் அணிவித்து சினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்னர்.

இந்நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.இஸ்

னத்தின் செயலாளர் எம்.ஐ.எம்.சிறாஜுதீன், பொருளாளர் ஏ.மாபீர், சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.தஸ்தக்கீர், மாவட்ட ஆலோசகர்களான ஓய்வு பெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசிம், ஓய்வு

பெற்ற அதிபர்களான ஐ.எல்.ஏ.மஜீத்,ஏ.ஆர்.சித்தீக், டாக்டர் ஏ.எம்.அஹமட் லெப்பை உட்பட ஆலோசகர்கள்,சம்ஆமளனத்தின் பதவி வழி உத்தியோகத்தர்கள்,உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் சம்மேளனத்தின் புதிய சீருடை 2019ம் ஆண்டுக்கான நாற்குறிப்பேடு மற்றும் நாட்காட்டியும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

# 46வது கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

46வது கிழக்கு மாகாண விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகள் சனிக்கிழமை கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த 10 ஆம் திகதி மெய்வல்லுனர் போட்டியின் அங்குரார்ப்பண நிகழ்வு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி .எம். எல். பண்டாரநாயக்க அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இறுதி நாள் விருது வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.சி. எல்.பெர்ணான்டோ கலந்து சிறப்பித்தார்.

இவ்விளையாட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஜே.ரக்சயா சிறந்த சுவட்டு வீராங்கனையாகவும், அம்பாறை மாவட்டத்தின் எம் .எச் .சபீர்அலி சிறந்த சுவட்டு வீரராகவும், ஈட்டி எறிதலில் பங்குபற்றிய அம்பாறை மாவட்டத்தின் டி. எம் .ஐ.ஹசந்தி சிறந்த மைதான நிகழ்ச்சிக்குறிய வீராங்கனையாகவும், நீளம் பாய்தல் போட்டியில் பங்குபற்றிய திருகோணமலை மாவட்டத்தின் ஏ.ஆபித் சிறந்த மைதானநிகழ்ச்சிக்குறிய வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் எம்.எச்.சபீர் அலி நாற்பத்தி ஆறாவது கிழக்கு மாகாண மெய்வல்லுனர் போட்டியின் அதி திறமை வாய்ந்த வீரராக தெரிவு செய்யப்பட்டதுடன் ,பெண்களுக்குரிய மெய்வல்லுனர் போட்டியில் இரண்டாம் இடத்தை அம்பாறை மாவட்டமும் முதலாம் இடத்தை மட்டக்களப்பு மாவட்டமும் ,ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் திருகோணமலை மாவட்டம் இரண்டாம் இடத்தையும் அம்பாறை மாவட்டம் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

ஒட்டுமொத்த மெய்வல்லுனர் போட்டிகளின் புள்ளிகளின் அடிப்படையில் இம்முறை சம்பியனாக முதலாம் இடத்தை அம்பாறை மாவட்டமும் இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு மாவட்டமும் பெற்றுக் கொண்டது. கிழக்கு மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் என். எம். நௌபீஸ் , திணைக்கள தலைவர்கள்,நடுவர்கள் ,பயிற்சியாளர்கள் ,மூன்று மாவட்டங்களின் வீர வீராங்கனைகளும் கலந்து சிறப்பித்தனர்.

# தோழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் - தோழிலாளர்கள் போராட்டம் - இ.தோ.காவும் ஆதரவு

(க.கிஷாந்தன்)



தோட்ட நிர்வாகம் மற்றும் கம்பனிகளுக்கு எதிராகவும், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் வலியுறுத்தி, தோட்டத் தொழிலாளர்களால் லிந்துலை நகரில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளும் பங்கேற்று, கூட்டு ஒப்பந்தத்துக்காக குரல் எழுப்பினர்.

லிந்துலை நகரில் நடைபெற்ற இப்போராட்டத்தில் டயகம, தலவாக்கலை, கொட்டகலை, லிந்துலை மற்றும் ஏனைய சில தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

இ.தொ.காவின் பிரதித் தலைவர் அனுஷியா சிவராஜா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சக்திவேல், கொட்டகலை, தலவாக்கலை பிரதேச சபைகளை சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட இ.தொ.காவின் பிரதிநிதிகளும் இப்போராட்டத்தில் பங்கேற்று, தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் பங்கேற்ற மக்கள், தோட்ட நிர்வாகம் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களின் கெடுபிடிகளை கண்டித்துடன், தமது உரிய வகையில் சம்பளம் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

ஞஞகொழுந்தின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அரை நாள் பெயர்தான் விழுகின்றது. ஆயிரம் ரூபா கிடைத்தும் பயன் இல்லை.ஙங என தொழிலாளர்கள் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தினர்.

கூட்டு ஒப்பந்தம் இல்லாததால்தான் தமக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டிய மக்கள், அந்த ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

# பாடசாலைப் பங்கேற்புடன் கூடிய கல்வி அபிவிருத்தி தொடர்பிலான பெற்றோருக்கான விழிப்புணர்வு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



திருகோணமலை மாவட்டம் கிண்ணியா வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட கிண்ணியா அலிஹார் மகாவித்தியாலயத்தில் பாடசாலைப் பங்கேற்புடன் கூடிய கல்வி அபிவிருத்தி தொடர்பிலான பெற்றோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று இடம் பெற்றது.

முஸ்லிம் எயிட் நிறுவனம் ஏற்பாட்டில் இடம் பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம அதிதியாக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசூகர்கான் கலந்து கொண்டார். கல்வி அபிவிருத்தி திட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் இவ் விழிப்புணர்வு நிகழ்வு பெற்றார்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாடசாலை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும் அவர்களுக்கான கற்றல் உபகரணங்களை இத் திட்டம் ஊடாக வழங்கவுள்ளனர். இந் நிகழ்வில் முன்னால் ஓய்வு நிலை அதிபர் எம்.பி.எம்.முஸ்தபா,பாடசாலை அதிபர் ஆர்.சதாத்,வலயக் கல்வி அதிகாரி ஏ.எம்.ஹிதாயத்துள்ளா உட்பட 100 க்கும் அதிகமான பெற்றார்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் நாடகப் பயிற்சிப் பட்டறை

( வாஸ் கூஞ்ஞ)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையிலும்; , வழிப்படுத்தலிலும் மன்னார் மாவட்ட செயலகம் ஒழுங்கு செய்த மன்னார் மாவட்ட கலைஞர்களுக்கான நாடகப் பயிற்சிப் பட்டறை சனிக்கிழமை (11.12.2021) மன்னார் மாவட்ட செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

மன்னார் மாவட்ட சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பயி;ற்சிப் பட்டறையில் மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வ. மகேஸ்வரன், மன்னார் மாவட்ட செயலக கணக்காளர் எஸ்.செல்வகுமார் ஆகியோர்; கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு நாடகப் பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் மடு பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி தவமதி ஆகியோர் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையின் தலைவர் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ரதிதரன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக விபுலானந்த அழகியற்கற்கைகள் பீடத்தின் விரிவுரையாளர் தி. தர்மலிங்கம் மற்றும் யாழ் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மா. அருள்சந்திரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் அவர்களின் வழிப்படுத்தலில் இந்தப்பட்டறை நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.





# வாழ்வாதார உதவிகளை சரியான முறையில் பயன்படுத்தி பயனடையுங்கள்-கைதடி பெரும்பாக உத்தியோகத்தர் அறிவுரை


(சாவகச்சேரி நிருபர்)

விவசாயிகள் தமக்குக் கிடைக்கும் வாழ்வாதார உதவிகளை சரியான முறையில் பயன்படுத்தி அதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என கைதடி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வி.வகீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்ற பயனாளிகளுக்கு மின் மோட்டர் வழங்கும் நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தகுதி அடிப்படையில் 2%விவசாயிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு வேர்ல்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.எமது சேவை நிலையத்திற்குள் 4000விவசாயிகள் உள்ள நிலையில் அதில் 2%பேரைத் தெரிவு செய்வதென்பது பாரிய நெருக்கடியான செயற்பாடு. எனவே உதவித் திட்டம் கிடைக்கப்பெற்ற விவசாயிகள் அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.கிடைக்கும் வாழ்வாதார உதவியை விற்பனை செய்தாலோ அல்லது தவறான விதத்தில் பயன்படுத்தினாலோ அது உதவித்திட்டம் கிடைக்காத விவசாயிகளுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தும்.கடந்த காலங்களில் வாழ்வாதாத உதவித்திட்டங்களை விற்ற சம்பவங்கள் சில இடம்பெற்றுள்ளன.நாம் உங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறான உதவித் திட்டங்களை ஏற்படுத்தித் தருகிறோம்.அதனை சரியாகப் பயன்படுத்தி வாழ்வாதார ரீதியாக உங்களை நீங்களே உயர்த்த வேண்டும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்

# கரடியனாறு அன்னை வேளாங்கன்னி ஆலயம்: மட்டக்களப்பு மறைமாநில ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் திறப்பு

( சதீஸ் )

மட்டக்களப்பு - கரடியனாறு சிவத்த போக்கடி - கிராமத்தில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட அன்னை வேளாங்கன்னி ஆலயம் ஞாயிற்றுக் கிழமை (12)

மட்டக்களப்பு மறைமாநில ஆயர் வணக்கத்துக்குரிய ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் ஓர் சிறிய ஆலயத்தில் அமர்ந்திருந்து அருள் வளங்கிய வேளாங்கன்னி மாதவுக்கு ஆலய பங்கு தந்தை ஜெமில்டன் முயற்சியால் இறை மக்களின் ஆதரவுடன் புதிய ஆயயம் அமைக்கப்பட்டு அவ் ஆலயம் இத் தினத்தில் திறந்து வைக்கப்பட்டதுடன் மறைமாநில ஆயர் வணக்கத்துக்குரிய ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் பங்குத்தந்தை ஜெமில்டன் மற்றும் அருட்தந்தை மகிமைதாஸ் போன்றோரால் விஷேட பூசை நடாத்தப்பட்டு கூட்டுத் திருப்பலி திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற இந் நிகழ்வில் கரடியனாறு, சிவத்த வோக்கடி, ஆயித்தியமலை போன்ற கிராமங்களிலிருந்து இறைமக்கள் கலந்து கொண்டனர்.

வருகை தந்த இறை மக்களுக்கு ஆயரினால் ஆசீர்வாதம் வழங்கியதுடன் நல்வழிப்படுத்தும் சமயக் கருத்துக்களும் வழங்கப்பட்டது.

# பனங்காட்டுப்பாலத்தினூடாக குடிநீர் இணைப்பை கோண்டு செல்லும் வேலைத்திட்டம்-100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு




(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பனங்காட்டுப்பாலத்தினூடாக குடிநீர் இணைப்பை கொண்டு செல்லும் வேலைத்திட்டம் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இடம் பெறவுள்ளது.

இத்திட்டத்திற்காக அரசினால் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் விரைவில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைவாக ஆரம்பிக்கப்படவுள்ள குடிநீர் இணைப்பை கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையினை பார்வையிட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பொறியியலாளர் பி.மயூரன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பொறியியலாளர் ந.லோகிஸ் கணக்காளர் க.பிரகஸ்பதி சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பி.ரவிச்சந்திரன் உள்ளிட்ட குழுவினர் சென்றதுடன் முன்னேற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

குறித்த நீர்வழங்கல் வேலைத்திட்டத்தினூடாக பனங்காடு சின்னப்பனப்பனங்காடு மகாசக்திபுரம் புளியம்பத்தை மளுவராயன் கிராமம் கண்ணகிகிராமம் உள்ளிட்ட 3000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையவுள்ளவர்.

இதேநேரம் கடந்த பலவருடகாலமாக ஆட்சியில் இருந்த பலரிடமும் குறித்த மக்கள் குடிநீரைப்பெற்றுத்தருமாறு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். இந்நிலையில் பல்வேறு அரசியல்வாதிகளும் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கி இருந்தனர்.

ஆயினும் தற்போது ஆட்சியில் உள்ள பொதுஜனபெரமுன அரசாங்கத்தின் மூலமே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய அரசுக்கும் அமைச்சருக்கும் அரசியல் தலைவர்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் இணைப்பாளர்களுக்கும் இதனை முன்னின்று செயற்படுத்தும் அரச உயர் அதிகாரிகளுக்கும் மக்கள் நன்றி தெரிவித்தனர்.

# அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபராக ஜெகதீசன் நியமனம்

( வி.ரி.சகாதேவராஜா)



அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபராக , இலங்கை நிரவாகசேவையின் முதலாந்தர அதிகாரியான அம்பாறை மாவட்ட மேலதிகஅரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராகக்கடமையாற்றிய டி.எம்.எல்.பண்டாரநாயக்க, கிழக்கு மாகாண பிரதம செயலாளராக பதவியுயர்வுபெற்றுச்சென்றுள்ளார்.

அவரது வெற்றிடத்திற்கு பொதுநிருவாக அமைச்சு இப்பதில் நியமனத்தை வழங்கியுள்ளது.

பாண்டிருப்பைச்சேர்ந்த வே.ஜெகதீசன், முன்னதாக ஆலையடிவேம்பு ,நாவிதன்வெளி ,காரைதீவு பான்ற பிரதேசயெலகங்களில் பிரதேசசெயலாளராக பணியாற்றி, இறுதியாக 2019இல் பதவியுர்வுபெற்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக சீரிய பணியாற்றிவந்திருந்தார்.

கடந்த %ஆம் திகதிமுதல் இப் பதில் நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

# கிராம மக்களின் காலடியில் முற்றிலும் இலவசமான நடமாடும் சுதேச மருத்துவ சேவை





(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியன இணைந்து முற்றிலும் இலவசமான சுதேச மருத்துவ நடமாடும் சேவையை திருகோணமலை - மூதூர் பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

மூதூர் பள்ளிக்குடியிருப்பு கிராம மக்களுக்கு ஆயுள்வேத மருத்துவ சேவையை அவர்களின் காலடிக்குச் சென்று வழங்க வேண்டும் என்ற நோக்கில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதரின் ஆலோசனைக்கும், மேற்பார்வையின் கீழ் இடம்பெற்ற இந்த நடமாடும் வைத்திய சேவையில் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ், எம்.எம்.பாத்திமா இஷாரா, எஸ்.தமிழரசி, எஸ்.நவரத்தினம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு.எஸ்.பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நடமாடும் சேவையில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வருகை தந்து வைத்திய சிகிச்சைகளை பெற்றுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் கோவிட் தடுப்பூசி நிபந்தனையை பூர்த்தி செய்யாதோர் தோழில்களில் ஈடுபட அனுமதி மறுக்கப்படும்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பகுதியில் கொரோனா தடுப்பூசிகள் பெறாதவர்கள் புதன்கிழமைக்கு (15.12.2021) முன் தங்கள் தடுப்பூசிகளை போட்டிருக்க வேண்டும். அன்றேல் இவர்கள் தொழில்களில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என மன்னார் மாவட்ட சுகாதார பகுதினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பகுதியில் முருங்கன் முசலி பகுதிகளில் வியாபார நடவடிக்கை, பொதுப்போக்குவரத்து, வாடகை போக்குவரத்து, சந்தை வியாபாரங்களில் ஈடுபடும் சகல 30 வயதுக்கு மேற்பட்டோர் மூன்று தடுப்பூசிகளைனயும் ஏனையோர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றிருத்தல் அவசியமானது.

புதன்கிழமைக்கு (15.12.2021) முதல் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் தொழில்களில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என மன்னார் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை பிரஜைகள் எவரும் திங்கள் கிழமை (13.12.2021) முருங்கன் சுகாதார வைத்திய அலுவலகத்தில் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

மேலும் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி விடுத்துள்ள வேண்டுகோளில் கடந்த காலங்களில் சினோபாம், கொவிஷீல்ட் மற்றும் பைஸர் வகை தடப்பூசியினைப் பெற்றுக்கொண்டவர்களில் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு 3 மாதங்களை பூர்த்தி செய்திருப்பின் மேலதிக வலுவூட்டல் பூஸ்டர் தடுப்பூசியானது திங்கள்கிழமை (13.12.2021) காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரை முருங்கனில் அமைந்துள்ள நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் போடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சினோபாம் முதலாம் இரண்டாம் தடுப்பூசியும் பைஸர் இரண்டாவது தடுப்பூசியும் மற்றும் 20 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலை இடைவிலகியவர்களுக்குமான பைஸர் தடுப்பூசியும் இச்சந்தர்ப்பத்தில் வழங்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனர்த்த நிலையின் போது பொது மக்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் சாய்ந்தமருதில் வீடு வீடாக சேன்று விழிப்புணர்வு ..!

## சாய்ந்தமருதில் வீடு வீடாக சென்று விழிப்புணர்வு ..!

( எம் .என் .எம் .அப்ராஸ் )







அனர்த்த நிலையின் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த நிலை பற்றிய கலந்துரையாடல் மற்றும் இது தொடர்பில் வீடு வீடாக சென்று பொது மக்களுக்கு தெளிவுட்டும் விழிப்புணர்வுநடவடிக்கைகள் சாய்ந்தமருதில் (11) சனிகிழமை பிற்பகல் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வானது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் அவர்களின் ஒருங்கிணைப்பில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் எம். ஏ. சி. எம் . ரியாஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்பமாக சாய்ந்தமருது ரியாலுள் ஜான்னா வித்தியாலத்தில் பிரதேச மட்ட முக்கியஸ்தகர் களுடன் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய ஆலோசனைகள் மற்றும் இது தொடர்பிலான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது இங்கு உரையாற்றிய அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் எம். ஏ. சி. எம் . ரியாஸ் அவர்கள் பொது மக்களுக்கு அனர்த்த நிலை தொடர்பில் அனர்த்த பாதுகாப்பு மற்றும் தயார்படுத்தல் முன்னாயத்த நிலை பற்றி விழிப்புணர்வினை மேற்க்கொள்ளும் முகமாக சாய்ந்தமருது பிரதேச செயலகம்,அனர்த்த முகாமைத்துவ நிலையம்,கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவ உறுப்பினர்கள் , மாவட்ட மட்டஅனர்த்த முகாமைத்துவ பிரதேச மட்ட தொண்டர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து இவ் விழிப்புணர்வு வேலைத் திட்டத்தினை முன்னெடுத்துள்ளோம் இதன் மூலம் பொது மக்களுக்கு அனர்த்த நிலையில் மேற் கொள்ள கூடிய நடவடிக்கை பற்றிய தெளிவு ஏற்ப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் விரைவில் சாய்ந்தமருது தோனா வெள்ள நீர் வழிந்து செல்லும் முகாமாக சீர் செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளது .

மேலும் சாய்ந்தமருது தோணாஅண்டிய பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ சுற்று சூழல் பாதுகாப்பு தொடர்பான விழி'புணர்வுகளை மேற்கொள்வதுடன் சூழல் பாதுகாப்பது சார்ந்த போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

குறித்த நிகழ்வின் பிரதான அங்கமாக அனர்த்த நிலையின் போது மேற்கொள்ள விடயங்கள் பற்றி பொது மக்கள் மத்தியில் வழிகாட்டல் விழிப்புணர்வை மேற்கொள்ளும் முகாமாக சாய்ந்தமருது 08 மற்றும் 10 ஆம் கிராம சேவகர் பிரிவில் அனர்த்தபாதுகாப்பு மற்றும் தயார்படுத்தல் முறைமைகள் தொடர்பாக வீடு வீடாக சென்று பொது மக்களுக்கு அனர்த்தநிலையின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி தெளிவுட்டப்பட்டதுடன் அவை தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டது .

சாய்ந்தமருது பிரதேச செயலக அனர்த்த நிவாரண அபிவிருத்தி உத்தியோகத்த கர்களான எம்.எம்.எம். அர்சாத் , எம். எச். முபாரக் ,கிராம சேவகர்கள்,

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்பிரிவில் (8,10) உள்ள கிரம மட்ட அனர்த்த

முகாமைத்துவ உறுப்பினர்கள் ,அனர்த்த முகாமைத்துவ பிரதேச மட்ட தொண்டர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

குறித்த விழி'ப்புணர்வு செயற்பாடு மூலம் தங்கள் அனர்த்த நிலை தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய பலவிடயங்கள் அறிந்து கொண்டதாகவும் இவ்வாறான நல்ல செயற்பாடு களை மேற்கொண்டு வரும் அனைவருக்கும் பொது மக்கள் தமது நன்றியினை இதன் போது தெரிவித்துக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு







(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மண்முனை தென் எருவில் பற்று மற்றும் போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட இந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த கருத்தரங்கின் வளவாளர்களாக இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீமத் சுவாமி தக்சஜானந்தாஜி மற்றும் அம்பாறை மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. ஜெயராஜி ஆகியோர் கலந்து கொண்டு அறநெறிப்பாடசாலை மூலம் மேற்கொள்ளவேண்டிய செயற்திட்டங்கள் ஒழுக்க விழுமிய பண்புகள் தொடர்பாக கருத்துரை வழங்கியதுடன் தியானம் மூச்சுப்பயிற்சி போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கருத்தரங்கின் போது மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சங்கத்தினரால் புத்தக கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

# கடலில் தத்தளித்த சக மீனவனை காப்பாற்ற எத்தணித்த மீனவன் உட்பட இரு மீனவர்கள் கடலில் மறைந்துள்ளனர்

## மன்னாரில் சம்பவம்

( வாஸ் கூஞ்ஞ)

கடலில் தங்கள் படகின் வெளிக்கள இயந்திரத்தை பரீட்சித்து பார்க்கும் நோக்குடன் ஒரு படகில் சென்ற மூன்று மீனவர்களில் இருவர் கடலில் மூழ்கிய நிலையில் தேடுதல் இடம்பெற்று வருகின்றது. மற்றைய மீனவர் படகுடன் கரை சேர்க்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இவ் சம்பவம் மன்னார் கோந்தப்பிட்டி கடல் பரப்பில் ஞாயிற்றுக்கிழமை (12.12.2021) நண்பகல் வேளையில் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஆரம்ப விசாரனையில் தெரிவிக்கப்படுவதாவது யாழ் பருத்தித்துரையைச் சார்ந்த மீனவர்கள் மன்னார் நகர் பகுதியில் அமைந்துள்ள கோந்தப்பிட்டி என்ற பகுதியில் தூண்டில் மூலம் தொழில் புரிந்து வருபவர்கள் எனவும்

சம்பவம் அன்று ஞாயிற்றுக்கிழமை (12.12.2021) நண்பல் வேளையில் இவர்கள் தங்களின் வெளிக்கள படகின் இயந்திரத்தை பரீட்சித்து பார்க்கும் நோக்குடன் கோந்தப்பிட்டி கடற்பரப்பில் மூன்று மீனவர்கள் ஒரு படகில் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் சமயம் இவ் பகுதியிலுள்ள கால்வாய் பகுதியில் சென்று கொண்டிருந்தபொழுது படகின் இயந்திரம் பழுதடையவே இதில் சென்ற மீனவரில் ஒருவர் கரைக்கு வந்து மெசின் சாவியை எடுத்து வருவதற்காக கடலில்



பாய்ந்து கரைக்குவர எத்தணித்த வேளையில் கடல் சுழிக்குள் அகப்பட்டு தத்தளித்துள்ளதாகவும்

இதை கண்ணுற்ற மற்றைய மீனவர் இவரை காப்பாற்ற தானும் கடலில் குதித்து சக மீனவரை காப்பாற்ற எத்தணித்த வேளையில் அவரும் கடல் சுழிக்குள்அகப்பட்ட நிலையில் இருவரையும் காணாத நிலையில் கடற்படை, மன்னார் பொலிசார் மற்றும் சக மீனவர்கள் இவர்களை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மற்றைய மீனவர் படகுடன் கரை சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. காணாமல் தேடப்பட்டு வரும் மீனவர்கள் தர்சன் மற்றும் செந்தூரன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 40 நாடுகளைச் சேர்ந்த 566 பேர் கலந்து கோண்ட போட்டியில் சாதித்த இலங்கையர் !

(நூருல் ஹுதா உமர்)

கட்டார் நாட்டில் நடைபெற்ற 40 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்ட 90 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட அம்பாரை மாவட்டம் வரிபத்தான்சேனையைச் சேர்ந்த மீராசா றெளசான் தனித்து ஓடுவதற்கான பட்டியலில் கலந்துகொண்டு ஓடி தன் இலக்கை நிறைவு செய்தமைக்காக பதக்கத்தினையும் பாராட்டையும் பெற்றுள்ளார்.

அல்ட்ரா ரன்னர் (ULTRA RUNNER) நிறுவனத்தின் ஏற்பாட்டில் கட்டார் விளையாட்டுகளுக்கான அனைத்து சம்மேளனம் (Qatar Sports for All Federation) அனுசரணையுடன் மேற்படி மரதன் ஓட்டப்




பந்தயம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (10) நடைபெற்றது. இந்தப் பந்தயத்தில் தனித்து ஓடுவதற்கான பட்டியலில் 151 பேரும், குழுக்களாக ஓடுவதற்குரிய பட்டியலில் 415 பேருமாக 40 நாடுகளைச் சேர்ந்த 566 பேர் கலந்து கொண்டனர்.

இதில் அம்பாரை மாவட்டம் வரிபத்தான்சேனையைச் சொந்த இடமாகவும், மருதமுனையைத் திருமண உறவாகக் கொண்டவருமான மீராசா றெளசான் என்பவர், தனித்து ஓடுவதற்கான பட்டியலில் கலந்துகொண்டு முழுமையாக 90 கிலோமீற்றர் தூரத்தையும் ஓடி தன் இலக்கை நிறைவு செய்தார். ஒவ்வொரு வருடமும் கட்டார் நாட்டில் நடைபெற்று வருகின்ற இந்த பந்தயத்தில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் பங்குபற்றியமை இதுவே முதல்தடவையாகும்.

போட்டியில் கலந்து கொண்ட மேற்படி இலங்கையருக்கு கட்டாரின் இலங்கைக்கான தூதுவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் சீசீரீவி கமரா பற்றிய இலவச பயிற்சிநெறி




(பொலிவேரியன் நிருபர் எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு

ஐக்கிய இளைஞர் சக்தி நடாத்தும் மாபெரும் இலவச CCTV Camera Installation ஒருநாள் இலவச பயிற்சி நெறி (15) புதன்கிழமை கல்முனை பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணியின் தேசிய செயற்குழு உறுப்பினரும் அம்பாறை மாவட்ட செயலாளரும் அமைப்பாளருமான றிஸ்கான் முகம்மடின் ஏற்பாட்டில், காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 வரை ஒருநாள் நிகழ்வாக இடம்பெறும் இந்தப் பயிற்சி நெறி முடிவில், நிகழ்வில் கலந்துகொண்டு பயிற்சி பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்ளப்படவிருப்பவர்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் முன்கூட்டியே உங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை 0758688888 அல்லது 0703 750044 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# கோரோனாவில் இருந்து பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தோடர்பான விழிப்புணர்வு

(றாசிக் நபாயிஸ், ஏ.எல்.எம்.சினாஸ்)







கல்முனைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சமூகசேவையார்கள், சமய தலைவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெண்கள் அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு, உளவளத்துணை ஆலோசனை மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டல்கள் அடங்கிய விழிப்புணர்வு செயலமர்வு நேற்று (12) முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அனுசரணையில் நிறுவனத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளரும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபருமான ஏ.ஜீ.எம். நிசாத் அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இச்செயலமர்வில் வளவாளர்களாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் மனநல வைத்தியர் யூ.எல்.சராப்டீன் அவர்களும் அம்பாரை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் அவர்களும் கலந்து கொண்டு கருத்துக்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் இணைப்பாளர் யூ.எல்.கபீலா, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் உத்தியோகத்தகர் ஆர்.அனுஸ்ஹா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

AGROMATES 2020

# Remembering



18th December 2021
Saturday

# Professor S. Raveendranath

Please join us as we honor Prof. Raveendranath on the **FIFTEENTH** anniversary of his passing.

**Toronto/Washington: 6.30 am**
**UK: 11.30 am**
**Netherlands/Norway: 12.30 pm**
**Nairobi: 2.30 pm**
**Sri Lanka: 5.00 pm**
**Sydney/Melbourne: 10.30 pm**
**New Zealand: 12.30 am Sun**

**Zoom Meeting ID**
**824 7236 6202**

Your presence will be very valuable and highly anticipated!